Registered as a News paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது தை 4ஆம் நாள் ஷஃபான் பிறை20 (17-1-63) வியாழக்கிழமை இதழ் 3:6

யாழ்ப்பாண மக்களுக்கோர் நற்செய்தி!
புதிதாகத்திறக்கப்பட்ட ஸ்தாபனம்




அல்பேட் எதிரிசிங்க
பிரசித்தமான கண்பரிசோதகரும்
மூக்குக்கண்ணடி விற்பனையாளரும்
45, மெயின்வீதி, : யாழபபாணம்.

# சதி வழக்கு: புதிய நீதி மன்றமும் தகுதியில்லை

## சரசாலையில் துப்பாக்கிச் சூடு: இருவர் ஸ்தலத்தில்மாண்டனர்

### மற்றொருவருக்கு பலத்த காயம்; ஐவருக்கு விளக்க மறியல்

சாவகச்சேரி, புதன்

சாவகச்சேரியைச் சேர்ந்த சரசாலையில் பொங்கல் தினமான திங்கட்கிழமை இரவு நடைபெற்ற ஒரு துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் கொல்லப்பட்டனர். மற்றொருவர் பலத்த காயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வேறொருவர் சிறு காயங்களுடன் உயிர் தப்பினர்.

சரசாலை வாசிகளான கதிரன் சரவணை, சின்னவன் சின்னத்தம்பி ஆகிய இருவருமே துப்பாக்கிச் சூட்டினால் ஸ்தலத்திலேயே மாண்டவர்களாவர்.

துப்பாக்கிச்சூடு சரவணையின் வீட்டில் நடைபெற்றது. இச்சம்பவத்தால் தம்பர் நாகர் என்பவர் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். நாகமுத்து குணரத்தினம் சிறு காயமடைந்தார்.

தைப்பொங்கல் தினம் சீன வெடிச் சத்தத்தைப் பயன்படுத்தி இருபத்தொரு துப்பாக்கிச் சூடு இச்சம்பவத்தில் பிரயோகிக்கப்பட்டனவாம்.

சென்ற ஆறு மாதங்களின் முன் சரவணை தங்கராசா என்பவர் வேறு வகுப்பைச் சேர்ந்த ஒரு பெண்ணைக் கடத்திச் சென்றதாகவும் அவர்கள் அங்கு தம்பதிகளாக வாழ்ந்து வருவதாகவும், இதுவே இச்சம்பவத்துக்குக் காரணமெனவும் கூறப்படுகிறது.

சாவகச்சேரிப் பொலிசார் புலன் விசாரணை செய்துவருகின்றனர். சந்தேகத்தின்மீது இதுவரை ஐவர் கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

## கொழும்பு மகாநாட்டு தீர்மானம் 20 ம் திகதி வெளியிடப்படும்

### பிரதமர் சிறிமா அறிக்கை

கொழும்பு, புதன்

இந்திய-சீன எல்லைத் தகராறை சமாதானமாகத் தீர்த்துவைக்கும் நோக்கத்துடன் கொழும்பில் கூடப்பட்ட ஆறு ஆசிய ஆபிரிக்க நடுநிலைமை நாடுகளின் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்ட யோசனைகளை இம்மாதம் 20-ம் திகதி வெளியிடுவதற்குத் தாம் இந்த நாடுகளின் சம்மதத்தைக் கோரியுள்ளதாகப் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா இன்றுவெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

பிரதமர் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொழும்பு மகாநாட்டு யோசனைகள் இந்தியா சீனு ஆகிய இரு நாடுகளின் பிரதமர்களையும் நேரடியாசப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அடிப்படையான முயற்சியாகவிருக்கிறது எனக் கொள்வதற்கு போதிய காரணம் இருக்கிறது.

நான் இந்திய சீனப்பிரதமர்களுடன் இதுசம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் நடத்தி வந்தபோது முழு விபரங்களையும் கொழும்பு மகாநாட்டில் கலந்து கொண்ட ஏனைய ஐந்து நாடுகளுக்கும் அவ்வப்போது தெவித்துள்ளேன்.

கொழும்பு மகாநாட்டின் தீர்மானங்கள் பற்றி முடிவு செய்யும் பொறுப்பு பாரகத்திடமும் சீனுவிடமும் விடப்பட்டுள்ளது.'

இலாகா அற்ற மந்திரி திரு. பீலிக்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கொழும்பு மகாநாட்டு யோசனைகளை சீனு ஏற்றுள்ளதாகத் தெவித்துள்ளார்.

---

## இன்று

சுவாமிவிவேகானந்தரின் நூற்றூண்டு விழா, காலை 9 மணிக்கு வைத்தீஸ்வரக் கல்லூரியில் ஆரம்பித்துவைக்கப்படும்.

சுவாமி விவேகானந்தரின் நூருவது ஆண்டு விழா வெள்ளவத்தையிலுள்ள இராமகிருஷ்ணமிஷனில் மாலை 6.30-க்கு ஆரம்பித்துவைக்கப் படும். விழாவை நீதியரசர் திரு. டி. எஸ். பெர்னுண்டோ ஆரம்பித்துவைப்பார்.

கதிர்காமத்திலுள்ள இராமகிருஷ்ணமடத்திலும் விழா கொண்டாடப்படும்.

## திரு. அபயசுந்தரா இல்லாத மற்ரெரு நீதி மன்றம் விசாரிக்கும்

### கைதிகளை பிணையில் விடுமாறு ஜி. ஜி. கோரிக்கை

கொழும்பு, புதன்

இலங்கை அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதிசெய்ததாகக் குற்றஞ்சாட்டி 24 பேர்மீது தொடரப்பட்ட வழக்கு இரண்டாவது தடவையாக நியமிக்கப்பட்ட நீதியரசர்கள் முன்னிலையிலும் விசாரணை செய்யப்படமுடியாதுபோய்விட்டது. வழக்கு மீண்டும் திகதி குறிப்பிடப்படாமல் இன்று ஒத்திவைக்கப்பட்டது.

### விசாரிக்க நீதிமன்றத்துக்கு தகுதியில்லை

சதிவழக்கை விசாரணை செய்வதற்கு இரண்டாவது தடவையாக நியமிக்கப்பட்ட நீதிமன்றமும் அதற்குத் தகுதியில்லையென்று மூன்று நீதிபதிகளும் முடிவுசெய்துள்ளதாக நீதிமன்றத் தலைவர் நீதியரசர் திரு. எல். பி. டி' சில்வா இன்று சதிவழக்கு விசாரணைக்காக நீதிமன்றம்கூடிய போது தெரிவித்தார்.

### ஒரு நீதியரசர் ஆலோசனை கூறியிருந்தார்

இந்த வழக்கை இந்த நீதிமன்றம் விசாரணை செய்வதற்குத் தகுதியில்லையென்று தாங்கள் கருதுவதற்குரிய காரணத்தை நீதிமன்றத் தலைவர் நீதியரசர் திரு. எல். பி. டி. சில்வா நீதிமன்றத்தில் தெரிவித்தார். நீதியரசர் திரு. எல். பி. டி' சில்வா (தலைவர்) நீதியரசர் கிங்ஸ்லி ஹெரத், நீதியரசர் ஏ. டபிள்யு. எச். அபயசுந்தரா ஆகியோர் இவ்வழக்கை விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட புதிய நீதியரசர்கள். "நீதியரசர் திரு. அபயசுந்தரா சென்ற வருடம் மார்ச்மாதத்தில் பதில் அட்டர்ணி ஜெனரலாகப் பணியாற்றியிருக்கிறார். இந்தச் சமயத்தில் சதிவழக்குச் சம்பந்தமான சில சட்ட தஸ்தாவேஜுகளுக்கு அவர் அங்கீகாரமளித்திருக்கிறார். சதிக் குற்றச் சாட்டு சம்பந்தமான புலன் விசாரணைகளில் திரு அபயசுந்தரா சட்ட ஆலோசனை கொடுத்திருக்கிறார்" என்று நீதிமன்றத் தலைவர் நீதியரசர் திரு. எல். பி. டி' சில்வா விளக்கம் தெரிவித்தார். "இதுபற்றி நீதியரசர் அபயசுந்தராவுக்கு ஒன்றும் தெரியாது. இன்று காலைதான் அட்டர்ணி ஜெனரல் திரு டக்ளஸ் ஜான்ஸ் எங்கள் கவனத்துக்கு இவ் விஷயத்தைக் கொண்டுவந்தார். இதர நீதியரசர்களிருவருடனும் கலந்தாலோசித்து அவர்களுடைய சம்மதத்துடன் இந்த வழக்கை விசாரணை செய்வதற்கு இந்த நீதிமன்றம் சரியான முறையில் அமைக்கப்படவில்லையென்ற முடிவுக்கு வந்தோம்" என்று நீதியரசர் திரு. சில்வா விளக்கம் தெரிவித்து, 'எனவே இந்த வழக்கை விசாரணை செய்யக்கூடிய நிலையில் நாங்கள் இல்லை' என்று அறிவித்தார்.

### 'பிணையில்செல்ல அனுமதிக்கவேண்டும்' ஜி. ஜி.

16 சந்தேக நபர்களின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தமது விவாத ஆரம்பத்தில் காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களைப்பிணையில்செல்ல அனுமதிக்கவேண்டுமென நீதிமன்றத் தலைவரிடம்கோரிக்கை விடுத்தார். இதன்பின்னர் தொடர்ந்துபேசுகையில் திரு. ஜி. ஜி. சுட்டிக்காட்டியதாவது:- பெரிய ஆஸ்பத்திரி சுப்பிரிண்டனின் பாதுகாப்பிலிருந்து திரு. சிட்னி டி' சொய்சா இங்கு கொண்டுவரப்பட்டுள்ளார். அவர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தபொழுது கடுமையான பாதுகாப்புடன் இருந்துள்ளார். அவரை பிஸ்கால் பாதுகாப்பில் ஒப்படைக்குமாறு நான் கோருகின்றேன். அவர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெறும் வரையில் இவ்வித பாதுகாப்பில் அவரை ஒப்படைக்குமாறு நான் கோருகின்றேன்

### கைதிகளுக்கு பிஸ்கால் காவல்

இதுசம்பந்தமாக நீதிமன்றத்தலைவர் பதிலளிக்கையில் 5-வது எதிரியான சிட்னி டி' சொய்ஸா பெரியாஸபத்திரியிலிருந்து இங்குகொண்டுவரப்பட்டுள்ளதாக எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பிஸகால் பாதுகாப்புடன் அவர் ஆஸ்பத்திரிக்கு மீண்டும் எடுத்துச் செல்லப்படவேண்டுமென நாம் உத்தரவுபிறப்பிக்கின்றோம் அவர் எவ்வளவுகாலம் ஆஸபத்திரியில் சிகிச்சைபெறவேண்டுமென ஆஸபத்திரி அதிகாரிகள் கருதுகின்றார்களோ அவ்வளவுகாலமும் அவர் பிஸகால்பாதுகாப்பிலேயே இருக்கவேண்டும். 5-வது எதிரி ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெறும்வரை பிஸ்கால் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கும். அவரது பாதுகாப்புக்கு இது தேவையென்பதால் இவ்வித உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது எனத்தெரிவித்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

எனது ஓவிய நிலையத்தில் வேலைசெய்ய உதவியாளர் (Commercial Artist) தேவை. செ. இரத்தினகோபால், 39, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 641

### காணி விற்பனை

இணுவில் ஆஸ்பத்திரிக்குப் பின்னாலுள்ள பத்துப் பரப்புத் தோட்டக்காணி தோட்டஞ் செய்வதற்கும் குடியிருப்பதற்கும் உகந்தது. விலை பரப்பு ரூபா 3000/-

க. கதிரவேலுப்பிள்ளை,
Accountant,
சுதுமலை வடக்கு,
644 மானிப்பாய்.

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனாம். தொய்வுக்கு 10நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணநந்தர்,
கைலாயபிள்ளையார்கோவிலடி.
யாழ்ப்பாணம்

### அடைவு நகை ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை ரோட்டில் 284-ம் நம்பர் கடையில் கா. ந. இளையதம்பி அவர்களிடம் 31-12-1961-ந் திகதிக்கு முன்வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவைகளை 7-2-1963-ந் திகதி வியாழக்கிழமை காலை 10மணி தொடக்கம் மேற்படிகடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனவுகாரர்,
Court Commissioner & Valuer.
643, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம். 647
16-1-63.

## நீர்கொழும்பின் புதிய மேயர்

நீர்கொழும்பு, புதன்

நீர்கொழும்பின் புதிய மேயராக திரு. ஜோன் ரூட்றிகோ தெரிவு செய்யப்பட்டுள்ளார். நீர்கொழும்பு மாநகரசபை கமிஷனர் திரு. ஏ. வி. சின்னையா தலைமையில் நேற்று நடைபெற்ற விசேஷ கூட்டத்தில் அதிகப்படியான ஒரு வாக்கினால் ரூட்றிகோ மேயராகத் தெரிவு செய்யப்பட்டார்.

திரு. ஜோன் ரூட்றிக்கோவுக்கு ஆறு வாக்குகளும் அவருடன் எதிர்த்துப் போட்டியிட்ட திரு. டென்சில் பெர்னாண்டோவுக்கு ஐந்து வாக்குகளும் கிடைத்தன.

---

## ஆசனக் கோவில் திருவிழா

மன்னார், புதன்

மன்னார் மாவட்டத்திலுள்ள ஆசனக் கோவிலின் வருடாந்த திருவிழா சென்ற வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி இருக்கிறது. புனித செபஸ்தியாரின் திருவிழாவிற்காகப் பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் குழுமியுள்ளார்கள். ஞாயிற்றுக்கிழமை பாடற்பூசையுடனும், திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடனும் திருவிழா முடிவடையும். வண. ஜி. ரி. பாலசுந்தரம் சுவாமியார் இத்திருநாள் வைபவத்தில் கலந்து கொள்வார்.

---

## 'விவசாயிகள் நாட்டின் முதுகெலும்பு'

திருகோணமலை, செவ்வாய்

"கிராம வாசிகளை அரசாங்கம் புறக்கணித்துவிட முடியாது. காம் இன்றேல் இந்நாடு இல்லை விவசாயிகள் ஒரு நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள்" என்று கிண்ணியாவில் உள்ள முனியனைச்சேனை இஸ்லாமிய முன்னணியின் முதல் கூட்டத்தில் பேசுகையில் ஜனாப் அபுசாலி கூறினார். ஆஸ்பத்திரி ஒன்று அமைத்துத்தரவேண்டும் என்ற பிரேரணையும் நிறைவேறியது.

## அவநம்பிக்கையின் விளைவு!

மக்கோனை, புதன்

மாவிலம் என்ற இடத்திலுள்ள ஒரு ரப்பர் தோட்டத்தில் தனது மனைவியுடன் வில்லியம் சிங்கோ வசித்து வந்தார். தொழிலாளியான வில்லியம் சிங்கோ, எங்கு சென்றாலும் அவரது மனைவியான கருணவதியும் கூடவே செல்வார். தனது கணவர் மீது கருணவதி கொண்ட அவநம்பிக்கைதான் இதற்குக் காரணம்!

ஒரு நாள் தனது கூப்பன் புத்தகத்தை எடுத்து வருவதற்காக தனது பெற்றோரின் வீட்டுக்குச் செல்வதற்கு கருணவதியிடம், வில்லியம் சிங்கோ அனுமதிகேட்டார். ஆனால் அனுமதி கிடைக்கவில்லை! மனமுடைந்த வில்லியம் சிங்கோ, தனது மனைவியின் வார்த்தைகளைப் புறக்கணித்துவிட்டு பெற்றோரின் வீட்டுக்குச் சென்றார்.

சிறிது நேரம் கழித்து வீட்டுக்குத்திரும்பிய வில்லியம் சிங்கோவை, கருணவதி கடிந்து பேசினார். மனமுடைந்த வில்லியம் சிங்கோ. றப்பர் ஸ்டோருக்குச் சென்று நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்!.

வில்லியம் சிங்கோவின் மரணம் குறித்து நடைபெற்ற மரணவிசாரணையில் மேற்கண்ட விபரம் தெரிவிக்கப்பட்டது.

---

## 'எல்லோருக்கும் சம உரிமை'

—எம். பி

அம்பலாங்கொட, புதன்

'பல்வேறு காரணங்களின் மூலம் முன்னர் சில சலுகைகளைப் பெற்றவர்களிடமிருந்து அச்சலுகைகள் இப்பொழுது எடுக்கப்பட்டதும் அதற்காக தமது உரிமைகள் பறிபோய் விட்டதாக கூறக்கூடாது. எடுக்கப்பட்ட உரிமை அவர்களது உரிமைகளல்ல' என்று அம்பலாங்கொடையில் நடைபெற்ற ஒரு கூட்டமொன்றில் அம்பலாங்கொடை எம்.பி. திரு. பி. டி. எஸ். குலரத்ன பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ஒரு ஜனநாயக நாட்டிலுள்ள எல்லாமக்களுக்கும் சமமான உரிமைகள் உண்டு என்றும் மக்கள் எல்லோரும் ஒற்றுமையுடன் வாழவேண்டுமென்றும் கூறினார்.

---

## மேற்கு ஜேர்மனி-கியூபா ராஜீய உறவு துண்டிக்கப்பட்டது

பொன், ஜன. 15

கியூபாவிலுள்ள ராஜீய உறவை மேற்கு ஜேர்மனி துண்டித்துக் கொண்டது. கிழக்கு ஜேர்மனியுடன் கியூபா முழு அளவில் ராஜீயத் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டதைத் தொடர்ந்தே மேற்கு ஜேர்மனி உறவைத் துண்டித்துக் கொண்டது.

---

## அமெரிக்க-பாரத வானவெளித் திட்டம்

வாஷிங்டன், ஜன. 15

சமாதான வானவெளி ஆராய்ச்சித் திட்டமொன்றுக்கு அமெரிக்காவும் இந்தியாவும் இணக்கம் தெரிவித்துள்ளது.

இவ்வருடம், திருவனந்தபுரத்துக்கருகில் கூட்டு விஞ்ஞானப் பரீட்சைகள் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## முற்போக்கு சர்வாதிகார ஆட்சி தேவை என்கிறார் எம். பி.

யக்கலை, புதன்

"பொது மனிதனின் விருப்பத்திற்கு மாறாகச் சில உயர்தர அரசாங்க அதிகாரிகள் வேலை செய்வதால் தொழிலாளர்கள், கமக்காரர்கள், தொழிற் சங்கங்கள் தலைமையிலான முன்னேற்ற சக்திகளைக் கொண்ட ஒரு சர்வாதிகார ஆட்சி இந்த நாட்டுக்குத் தேவைப்படுகிறது" என்று அண்மையில் நடைபெற்ற அலுத்கம மகாவித்த கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் கொள்கையின்படி வெளிநாட்டுக் கொள்கை, நடுநிலைமைக் கொள்கையாகவிருக்கவேண்டுமென்றும் அமெரிக்காவையோ அல்லது ரஷ்யாவையோ நமது கொள்கை ஆதரிப்பதாகவிருக்கக்கூடாதென்றும் கூறினார்.

1956-க்கு முன்னர் இருந்த இலங்கையின் திட்டம், முதலாளிவர்க்கத்தினரை மேலும் பணக்காரராக்கவும், ஏழைகளை மேலும் ஏழைகளாக்கவும் வகை செய்தது. நாம் நமது கடந்தகால எண்ணங்களை மறந்து, புதிய நினைவுகளுடன் இருக்கவேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழரசுக் கட்சியும் ஒன்றாக இணைந்து மக்களின் முன்னேற்றத்துக்கு தடையாகவிருக்கப் பார்க்கிறது. அவர்களின் முயற்சியை மக்கள் முறியடிக்கவேண்டும் என்றும் அவர் அவர் கூறினார்.

---

## சனசமூகநிலைய ஆண்டுவிழா

மாவிட்டபுரம், புதன்

தெல்லிப்பழை கிழக்கு திருமகள் சனசமூக நிலையத்தின் ஆறாவது ஆண்டுவிழா வருகிற ஞாயிற்றுக்கிழமை வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. என். வி. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

## 'இந்த நாட்டில் இரு கட்சிகளே'

—எம். பி.

கண்டி, புதன்

'ஐக்கிய தேசியகட்சி புதைக்கப்பட வேண்டுமென்று இடதுசாரியினர் முன்னர் கூறினார். ஆனால் இன்று, மார்க்ஸிய கட்சிகள் புதைக்கப்பட்டு நாட்டில் இரண்டு கட்சிகள் மட்டுமே இருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தான் அவ்விரு கட்சிகளுமாகும்' என்று ஐக்கிய தேசியக்கட்சியின் நுவர-தொடன்வெல இளைஞர் கூட்டத்தில் கண்டி எம். பி. திரு ஈ. எல். சேனநாயக்கா பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் சர்வதேசத் தகராறுகளைத் தீர்க்க முயல்வதற்கு முன்னர், இலங்கைப்பிரதமர் நமது உள்நாட்டு பிரச்னைகளைத் தீர்த்துவைக்க முயலவேண்டும் என்றும் இந்த நாட்டில் இன்று கல்வி வசதி கிடைக்காது ஏராளமான குழந்தைகள் கஷ்டப்படுகின்றனர் என்றும் கூறினார்.

திருமான கல்வி வசதிகள் முஸ்லிம்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்டிருக்கிறதென்றும் அவர் கூறினார்.


ஒஸ்டர்மில்க்

தாய்பாலின் தன்மையை மிக நெருங்கியது




தாய்பால் ஊட்டமுடியாத தருணங்களிலோ அல்லது தாய்பால் போதாமற் போகும் வேளைகளிலோ நீங்கள் ஒஸ்டர்மில்க்கை பரிபூரணமாக நம்ப முடியும். ஒஸ்டர்மில்க் திடகாத்திரமான சுகவளர்ச்சிக்கு அவசியமான இறும்பு சத்தும், விட்டமின் டி யும் கொண்ட ஒரு சுத்தமான பால் ஆகாரம்.

உங்கள் குழந்தை ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் திகழ

ஒஸ்டர்மில்க்

ஒஸ்டர்மில்க் குழந்தை புத்தகம் இலவசமாய் கொடுக்கப்படும்.
தபாற் செலவுக்காக 10 சத முத்திரை ஒன்றை கீழ்கண்ட விலாசத்திற்கு அனுப்பவும்.
கிளக்ஸோ—அலன்பரிஸ் (சிலோன்) லிமிட்டட் தபாற் பெட்டி 23, கொழும்பு.

# இந்தியா உடன்பாடான பதில் தரவில்லையாம்!

## சீனப் பத்திரிகை கூற்று

## இந்தியாவுக்கு லெபனுன் பிரதமர் அனுதாபம்

## இராணுவ அதிகாரிகள் பயிற்சி நிலையங்கள் இரண்டு திறக்கப்பட்டன

பீக்கிங், ஜன. 16

"எல்லைத் தகராறைச் சமாதானமாகத் தீர்ப்பதற்கு கொழும்பு மகாநாடுகள் தெரிவித்த யோசனைக்கு உடன்பாடான பதில் அளிக்க இந்தியா தவறி விட்டது' என்று ஒரு சீனப்பத்திரிகை நேக்றுக் கூறியதாக நவசீன செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது. 'எல்லைத் தகராறுக்குக் காணப்படும் தீர்வு எதுவும் பேச்சுவார்த்தையும் கூட இந்தியாவின் கௌரவத்தையும் கண்ணியத்தையும் மட்டும் பாதுகாப்பதாக இருக்க வேண்டுமென்று இந்திய அரசாங்கம் வலியுறுத்தி வருவதைக் கவனிக்க வேண்டும்' என்றும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

### இந்திய அரசாங்கத்தைப் பொறுத்தது

"இந்தியாவின் நிலை இதுவானால் பேச்சுவார்த்தை எப்படி ஆரம்பமாகும்? சமரசத் தீர்வைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. சீனு ஒருதலைப்பட்சமாக வாபஸாக வேண்டுமென்று இந்தியா கோருகிறது. சீனர் வாபஸானதும் இந்தியா வாபஸாவதற்குப் பதிலாக மீண்டும முன்னேறி சீனுவின் பிரதேசத்தை மீண்டும் வசப்படுத்திக் கொள்ளும். இந்தியா தனது நியாயமற்ற நிபந்தனையின்மூலம் சீனு தன்னிடம் பணியவேண்டுமென இந்தியா கேட்கிறது" என்று அந்தப் பத்திரிகை கூறிகிறது. எல்லைத்தகராறுக்குச் சமாதானத் தீர்வு காண வேண்டுமென்ற சீனுவின் தீர்மானம் உறுதியானது, அசைக்க முடியாதது. எல்லாம் இந்திய அரசாங்கத்தைப் பொறுத்திருக்கிறது என்று தா-குங்-போ என்ற அந்தப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

### லெபனுன்—இந்திய உறவு

நேற்று முற்பகல் புதுடில்லிக்கு வந்துசேர்ந்த லெபனுன் பிரதமர் திரு. ரஷீத் கராமேக்கு நேற்றிரவு இந்தியப்பிரதமர் நேரு, ராஷ்டிரபதிபவனில் விருந்துபசாரமொன்றளித்துக் கௌரவித்தார். இந்த விருந்து வைபவத்தில் லெபனுன் பிரதமர் பேசுகையில் இந்தியாவின் வடக்கிலும் வடகிழக்கிலும் நடந்த சம்பவங்களையிட்டு லெபனுன் மக்கள் கவலை கொண்டுள்ளனரென்றும் லெபனுன் மக்களின் உண்மையான அனுதாபத்தைத் தெரிவிப்பதாகவும் கூறினர். இந்தியாவுக்கு இப்பொழுது ஏற்பட்டுள்ள சிரமம் தீர்ந்து தனது பிரதேச ஒருமைப்பாட்டை அது பாதுகாத்துக கொள்ளும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்ததுடன் ஆசிய-ஆபிரிக்க ஒற்றுமைக்கும் உலக சமாதானத்துக்கும் இந்தியா தொடர்ந்து சேவை புரியுமென்றும் கூறினர். பன்னெடுங்காலமாக லெபனுனுக்கும் இந்தியாவுக்கும் இருந்துவரும் உறவு தமது விஜயத்தினல் மேலும் வலுவடையுமென்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

### இரு நாடுகளின் கொள்கை

கொள்கையிலும் உலகப் பிரச்னைகளை அணுகுவதிலும் லெபனுனும் இந்தியாவும் ஒரேமாதிரியான வழியைப் பின்பற்றுவனவென்றும் நடுநிலைமை நாடுகளான இந்தியாவும் லெபனுனும் இனியும் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்க வேண்டியது அவசியமென்றும் பிரதமர் நேரு கூறினு'. "சமாதானத்தையே நோக்கமாகக் கொண்ட இந்தியாமீது அண்டை நாடான ஒன்று சமீபத்தில் தகராறு செய்ததன்மூலம் இந்தியாவின் போக்கே எதிர்பாராத முறையில் மாறுதலடைய நேரிட்டுவிட்டது. நவீன உலகில் சில ஆதார முறைகளில் மாறுதல் ஏற்பட வேண்டியது தவிர்க்க முடியாததாகிவிட்டது" என்றும் திரு. நேரு கூறினர். நேற்று மாலையில் இந்தியப் பிரதமர் நேருவை லெபனுன் பிரதமர் சந்தித்துப பேசினர்.

### ராணுவ அதிகாரிகள் பயிற்சி நிலையம்

சென்னையிலும் பூனுவிலும் ராணுவ அதிகாரிகள் பயிற்சி நிலையங்களிரண்டு நேற்றுத் திறந்து வைக்கப்பட்டன. பூனுவில் ராணுவ பயிற்சி நிலயத்தை இந்திய பாதுகாப்புமந்திரி திரு. சாவன் திறந்து வைத்துப் பேசுகையில் எந்த நிலைக்கும் நாடு தயாராக இருக்க வேண்டுமென்றும் பாதுகாப்பு முயற்சிகளைத் தளர்த்தக் கூடாதென்றும் கூறினர். திறமை, தீரம், ஒற்றுமை ஆகிய மூன்றுமே ஆக்கிரமிப்பாளருக்கு அச்சத்தைக் கொடுப்பனவென்றும் கண்ணியத்தையும் கௌரவத்தையும் விட்டுக் கொடுத்து எந்த உடன்பாட்டுக்கும் நாடு இணங்காது என்றும் திரு. சாவன் கூறினர். சென்னையில் ராணுவ பயிற்சி நிலயத்தை எஃகு சுரங்கமந்திரி திரு. ஸி. சுப்பிரமணியம் திறந்து வைததுப் பேசுகையில் சமீபத்திய சம்பவங்கள் ராணுவ வலிமையின் அவசியத்தை உணர்த்துகின்றன என்று கூறினர். சீரிய மரபுகளைப் பின்பற்ற வேண்டுமென்று அவர் கூறினர்.

### 10 லட்சம் பேர்கொண்ட படை

நாடு முழுவதிலும் பத்து லட்சம் பேர்கொண்ட ஊர்காவற் படை திரட்டப்பட்டுவருகிறது. நகரங்களிலும் கிராமங்களிலும் அமைக்கப்படும் இந்த ஊர்காவற் படைகள் ஒரேமாதிரியான அமைத்துஒரேமாதிரியான பயிற்சியளிக்கபபடும்.

### இலங்கை பிக்குகள் பிரார்த்தனை

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள இலங்கை புத்த பிக்குகளின் பௌத்த சமாதானத் தூதுகோஷ்டியினர் இந்திய-சீன எல்லைத்தகராறில் அமைதித் தீர்வு ஏற்படவும் இந்தியா சமாதானப் பாதையில் முன்னேறிச் செல்லவும் நேற்று கல்கத்தாவில் இரவு முழுவதும் பிரார்த்தனை நடத்தினர்.

### கம்யூனிஸ்ட் தலைவர் அறிக்கை

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய நிர்வாகக் கமிட்டியின் கூட்டம் நேற்று ஆரம்பமானது. கட்சியின் தலைவர் திரு. எஸ். டாங்கே தமது ஐரோப்பிய சுற்றுப்பிரயாணம்பற்றிச் சமர்ப்பித்த அறிக்கையை கமிட்டி பரிசீலனைசெய்தது.

### தங்கக் கட்டுப்பாட்டு விதிகள்

தங்கக் கட்டுப்பாட்டு விதிகளை மீறுவோருக்கு அந்த விதிகளின் கீழ் கடும் தண்டனை விதிக்கப்படுமென்று அரசாங்கம் அறிவித்துள்ளது. 14 காரட் தங்கத்துக்குமேல் நகைகள் செய்பவர்களுக்கும் நகைகள் செய்விப்பவர்களுக்கும் தண்டனை விதிக்கப்படுமென அரசாங்கம் எச்சரித்துள்ளது.

## இந்திய - பாக். பேச்சுவார்த்தை

### மந்திரிகள் கட்டத்தில் மீண்டும் டில்லியில் ஆரம்பம்

புதுடில்லி, ஜன. 16

காஷ்மீர் பிரச்னை உட்பட இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலுள்ள சகல பிரச்னைகளுக்கும் சமாதானத் தீர்வு காணும் முயற்சியாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் மந்திரிகள் கட்டத்தில் சென்ற மாதம் ராவல்பிண்டியில் நடைபெற்று முடிவடைந்த முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையின் இறுதியில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இன்று புதுடில்லியில் ஆரம்பமாகின.

பாகிஸ்தான் தூதுகோஷ்டிக்கு பாகிஸ்தான் இயற்கைவள தொழில் மந்திரி திரு. புட்டோ தலைமை தாங்குகிருர். திரு.புட்டோ நேற்று புதுடில்லி பாலம் விமான நிலயத்தில் வந்திறங்கியபோது இந்திய ரயில்வே மந்திரி திரு. சுவர்ண் சிங் அவரை வரவேற்ருர்.

"இரு நாடுகளுக்கிடையிலும் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் உருவான பலன்களைத் தரும்" என்று நம்புவதாக திரு. புட்டோ ஏற்கனவே தயாரித்திருந்து விமான நிலயத்தில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருந்தார். இரு நாடுகளுககுமிடையிலுள்ள முக்கியமான பிரச்னை காஷ்மீர் பிரச்னைதானென்றும் இப்பிரச்னைக்குத் தீர்வு காணப்பட்டால் இரு நாடுகளும் தங்கள் பொருளாதார அபிவிருத்தியில் கவனம் செலுதத முடியும் என்றும் திரு. புட்டோ கூறினர்.

திரு.சுவர்ண்சிங் பேசுகையில் இரு நாடுகளுக்குமுள்ள பிரச்னைகளைச் சமரசமாகத் தீர்த்துக்கொள்வதற்கு தாம் மனப்பூர்வமாக முயற்சி செய்யப் போவதாக திரு சுவர்ண்சிங் தெரிவித்தார்.

## புரட்சிக் குழுவின் கட்டுப்பாட்டில் டோகோ

பாரிஸ், ஜன. 16

டோகோ ஜனதிபதி திரு. சில்வானுஸ் ஒலிம்பியோ சென்ற சனிக்கிழமை இரவு சுட்டுக் கொல்லப்பட்டபின் டோகோ இப்பொழுது ஒன்பது பேரடங்கிய புரட்சிக்குழு ஒன்றின் கட்டுப்பாட்டின் கீழுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இரவில் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளது. பொதுவாக நிலைமை அமைதியாக இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

புதிய அரசாங்கம் இன்னமும் நிறுவப்படவில்லை. என்ருலும் எந்தச் சமயத்திலும புதிய அரசாங்கம்பற்றி அறிவிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய அரசாங்கம் அமைப்பதற்கு டோகோவின் முன்னுள் பிரதமரும் கொலை செய்யப்பட்ட ஜனதிபதியின் மனைவியின் சகோதரருமான திரு. எம். நிக்கோலாஸ் குருனிஸ்ட்கி சம்மதம் தெரிவித்துள்ளாரென்றும் அவர் டோகோவையடுத்துள்ள டகோமி ராஜ்யத்திலிருந்து விரைவில் டோகோ தலைநகர் லோமக்கு வந்து சேருவாரென்றும் கூறப்படுகிறது.

கானுவில் தஞ்சம் புகுந்திருந்த போல்மிட்கி என்பவர் லோமிக்கு ஏற்கெனவே திரும்பி[illegible]டதாக ஒரு செய்தி கூறுகிறது.

கொலை செய்யப்பட்ட ஜனதிபதி ஒலிம்பியோவின் மந்திரிசபையைச் சேர்ந்த மந்திரிகள் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக லோமி ரேடியோ தெரிவித்தது.

### கென்னடி கவலை

டோகோ ஜனதிபதி ஒலிம்பியோ கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக அமெரிக்க ஜனதிபதி திரு. கென்னடி விடுத்த ஒருசெய்தி வெள்ளைமாளிகையால் வெளியிடப்பட்டது. "ஆபிரிக்காவில் ஸ்திரமான அரசாங்கத்தின் முன்னேற்றத்துக்கு இது ஒரு பெரிய அடி" என்று திரு. கென்னடி தமது செய்தியில் தெரிவித்துள்ளார். ஜனதிபதி ஒலிம்பியோவின் சேவையைப் பாராட்டிய திரு. கென்னடி மனிதாபிமானத்தை விரும்பும் சகலநாடுகளுக்கும் அவரின் இழப்பு பெரும் நஷ்டமாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஷோம்பே சரணுகதி!

### கடாங்கா பிரிவினை முடிந்துவிட்டது

நியுயோர்க், ஜன. 16

கடாங்கா பிரிவினை கைவிடப் பட்டுவிட்டதாகவும் கடாங்கா முழுவதிலும் ஐ. நா. சிப்பந்திகளின் நடமாட்டத்துக்கு பூரணசுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் கடாங்கா அதிபர் திரு. மொயிஸ் ஷோம்பே அறிவித்துள்ளார்.

காங்கோவுடன் கடாங்காவை இணைக்கும் ஐ. நா. தலைமைக் காரியதரிசியின் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளில் ஒத்துழைக்க தாம் எலிஸபெத்வில்லிக்குச் செல்லத் தயாராக இருப்பதாகவும் திரு.ஷோம்பே தமது 'சரணுகதி' பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

திரு. ஷோம்பேயின் இந்த அறிக்கையை ஐ. நா. தலைமைக்காரியதரிசி யுதாண்ட் வரவேற்றிருப்பதுடன் இத்துடன் பூசல் முடிந்து விடுமென நம்பிக்கை தெரிவித்துமிருக்கிருர்.

காங்கோ பிரதமர் திரு. அடௌலாவும் ஜனதிபதி கஸவுபுவும் ஐ நா. தலைமைக் காரியதரிசிக்கு எழுதியுள்ள கடிதத்தில் சென்ற நவம்பர் மாதத்தில் வெளியிடப்பட்ட பொதுமன்னிப்பு பிரகடனம் திரு. ஷோம்பேக்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் இன்னமும் பொருந்தும் என்று தெரிவித்துள்ளனர்.

## மணி வாக்கு

எழுமின்! விழிமின்! அருணோதயம் நெருங்குகின்றது. புதுவாழ்வின் பிரவாக அலை எழுந்துவிட்டது. அதன் கொந்தளிப்பு, இனி எதற்கும் கட்டுப்பட்டு நிற்கப்போவதில்லை. அன்னைபூமி இனியும் உறக்கத்தில் ஆழ்ந்திருக்கமாட்டாள்.

—சுவாமிவிவேகானந்தர்

ஈழநாடு

EELANADU. National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு தை மீ 4 உ (17-1-63)

## விவேகானந்தர் நூற்றுண்டு விழா

பாரதத்தின் பண்பாட்டில் நிலைகொண்டு சமரச ஞான தூதராக உலகெங்கணும் ஒளி பரப்பிய சுவாமி விவேகானந்தரின் நூற்றுண்டு ஜயந்தி விழா இன்று ஆரம்பமாகின்றது. இவ்விழா உலகின் பல பாகங்களிலும் ஒருவருட காலம் கொண்டாடப்படும்.

சுவாமி விவேகானந்தர் இவ்வுலகில் முப்பத்தொன்பது ஆண்டுகள் வாழ்ந்தார். ஆனல் குறுகிய காலஎல்லையில் அவர் செய்த அற்புத சாதனைகளோ மகத்தானவை. கீழைத்தேசத்தவரையும் மேனாட்டையும் ஒன்றுக்க் கவர்ந்த ஆத்மீக சாதனைகள் நிறைந்த வாழ்க்கை அது.

இராமகிருஷ்ண பரமஹம்சரின் அருளைத் தாராளமாகப் பெற்ற சுவாமிஜி அமெரிக்கா சென்று இந்து மதத்தன் சிறப்புக்களை உலாநிய நிலைநாட்டி வைத்த பெரும்பணியானது இந்தியாவின் புகழை ஓங்கச் செய்தது. சுவாமிஜி இந்தியா பெற்றெடுத்த ஞானக்குழந்தையாக இருந்தபோதிலும் அவர் மனித குலத்தின் பிரதிநிதியாகவே திகழ்ந்தார்கள். ஆண், பெண் இருபாலாரிடத்தும் உள்ள தெய்வீகத்தன்மையும் சமத்துவமனப்பான்மையும் நன்கு பிரகாசிக்க வேண்டுமென்பதே அவரது பெருநோக்காக இருந்தது.

அரசியல், சமூக, ஆத்மீகத் துறைகளில் உலகமக்கள் அனைவரும் ஒன்றுபட்டு மனித குலத்தின் ஈடேற்றத்துக்கு உழைக்க வேண்டுமென்ற பேருண்மையை அவர் எடுத்து விளக்கியது போல் வேறு எந்தத் துறவியும் விளக்கியதில்லை. அவரது வாழ்வில் மதமும் விஞ்ஞானமும் விவேகமும், நம்பிக்கையும் பழமையும் புதுமையும், கிழக்கும் மேற்கும் ஒன்றாக இணைந்தன. இத்தகைய மகத்தான ஓர் இணைப்பை சங்கமம் செய்யும் ஒரு மகாபுருஷராக அவர் விளங்கினார் எனக் கூறுவது எந்தக் காலத்துக்கும் பொருத்தமானது.

நம் மக்களுக்கு ஆத்மீக வாழ்வுதான் மூலாதாரமாக இருந்து வருகிறது. அதுசரியாக இருக்கும்வரை உலகில் எந்தச் சக்தியும் நம்மைஅழிக்க முடியாது. இந்த மிக உன்னத மான ஆத்மீகப் பெருஞ் செல்வத்தை நாம் காப்பாற்றி வருவோமானல் நாம் எவ்வித துன்பங்களாலும் கஷ்டங்களாலும் பாதிக்கப்படாதிருப்போம். இதனை நாம் அறிந்து கொண்டால் நமது தேசத்தின் முன்னேற்றத்துக்காக நமது மக்கள் ஆத்மீக சக்தி அனைத்தையும் ஒன்று திரட்ட வேண்டியது அவசியமென்பது புலப்படும். இங்ஙனமே இதற்கு முன் நடந்திருக்கிறது; இனிமேலும் இவ்விதமே நடைபெறும் எனச் சுவாமிஜி கூறியுள்ள வார்த்தைகள் இன்றைய உலகநிலையிலும் ஊன்றி உணரத்தக்கன.

மேனாட்டில் வெற்றிமுரசு கொட்டித் தாய்நாடு திரும்பும் வழியில் சுவாமி விவேகானந்தர் இலங்கைக்கும் விஜயம் செய்தார். இதன் பயனாக இந்நாட்டிலும் சமரச ஞான வேட்கை உண்டாயிற்று. நாட்டின் பலபாகங்களிலும் இராமகிருஷ்ணரின் ஞானஒளி பிரகாசிக்கலாயிற்று. கொழும்பிலுள்ள இராமகிருஷ்ணமடமும் ஏனைய கிளைகளும் குருதேவரின் வழியில் மக்களுக்கு அரும் பணியாற்றி வருகின்றன. சுவாமிஜி அந்நாட்களில் ஏற்பட்ட சிரமங்களையும் பொருட்படுத்தாது யாழ்ப்பாணத்துக்கும் வருகை புரிந்து ஞானதீபத்தை ஏற்றிவைத்தார். இம் மகாபுருஷரின் தரிசனத்தைப் பெற்ற இந்நாடு இந்நூற்றுண்டு விழாவின்போது அவரின் நினைவைத் தக்கமுறையில் நிலைநாட்டுவது ஒரு நற்பணியாகக் கருதப்படும்.

இன்று சுவாமி விவேகானந்தரின் நூற்றுண்டு ஜயந்திவிழா

# துறவிகள் பரம்பரையில் ஒரு ஞான சூரியன்

— நா. கிரிதாரி பிரசாத் —

கோயமுத்தூர்

நரேந்திரர் முதன் முதல் குருதேவர் இராமகிருஷ்ணரை 1882-ம் ஆண்டில் சந்தித்தார். முதல் சந்திப்பிலேயே நரேந்திரருக்காக ஏங்கிக்கொண்டிருந்த இராமகிருஷ்ணர் இவரைக் கண்டதும் கண்ணீர் மல்க இத்தனை நாட்கள் என்னை எப்படி நரேந்திரா மறந்திருந்தாய். சேயைக் காணுத தாய் போல் தத்தளிக்கும் என்னை மறக்கலாமா என்று கையைப் பிடித்து வாயில் தின்பண்டங்களைத் திணித்து மறந்துவிடாது மறுபடியும் வாவென்று அனுப்பினர். ஒரு மாதங் கழித்து நரேந்திரர் குருதேவரை மீண்டும் சந்தித்தார். கடவுளைக் காட்டினால்தான் நம்புவேன். இல்லையேல் கடவுளென்பதெல்லாம் பொய்யென்று புகன்ற நரேந்திரனுக்குக் கடவுளைக் காட்ட விரும்பிய குருதேவர் தன் பொன்போன்ற திருவடிகளால் நரேந்திரனைத் தொடக் கண்களும், கட்டடங்களும் உலகமும் சுழல ஆரம்பித்துவிட்டன. நரேந்திரர் கடவுளைக் கண்டுவிட்டேன். எனக்கு அப்பாவும் அம்மாவும் இருக்கிறார்கள். என்னை மன்னித்தருளுங்கள் என்று வேண்ட குருதேவர் அவருக்கு மறுபடியும் இவ்வுலக எண்ணத்தை வழங்கினார். மூன்று முறையும் இதே போல் நரேந்திரரை ஆட்கொண்டு அவருடைய முற் பிறப்பின் இரகசியங்களையும் எதிர்கால வாழ்க்கையின் சிறப்புகளையும் அறிந்துகொண்டார்.

### தந்தையின் பிரிவு

நரேந்திரருடைய தந்தை 1884-ம் ஆண்டு எதிர்பாராத வண்ணம் மண்ணுலகை நீத்தார். இது அவருடைய இளம் உள்ளத்திற்கு அளவற்ற துயரத்தைக் கொடுத்தது தந்தை இறந்தபின் தான் தனியனாக நிற்பதையுணர்ந்தார். நேற்று வரை தன்னை அணைத்தவர்கள் இன்று தன்னை வெறுப்பதையறிந்தார். தந்தையோ ஊதாரிச் செலவுகள் செய்து பெருங் கடன்காரனாக இறந்துபோனார் வீட்டில் உண்ணவோ வழியில்லை. ஆறு உயிர்கள் அரைப் பட்டினியில் தவிக்கும் அவல நிலை. தன் நிலையையும் சமுதாயத்தின்நிலையையும் எண்ணி எண்ணி ஏங்கித் தன்னைக் கைவிட்ட சமுதாயத்தின் மீது பழிவாங்க எண்ணங்கொண்டார். இறைவன் என்பது ஒரு மாயமாசலாம். என்றும் இறைவனை நம்பிவாழ்வது நல்ல மற்றதெனவும் வாதம் செய்யத் தொடங்கினர். வேலை தேடியும் கிடைக்கவில்லை. பசியுடன் நடந்து களைத்து மயக்கமுற்று நடுவழியில் விழுந்துவிட்டார். இப்படி துயருற்றபோது வஞ்ச



எண்ணத்தால்தன்னை மயக்க விரும்பிய இரு பெண்களின் உதவியையும் பொருட்படுத்தாது தன் குருநாதரையடைந்து எப்படியாவது தன் கவலையை மாற்ற எண்ணினர்

ஒருதினம் இராமகிருஷ்ணரைக் காணச்சென்றார். தன் குறைகளைச் சொல்ல எண்ணிய அவர் சொல்ல இயலாது துயருற்றிருந்ததை எண்ணிய குருதேவர் "நரேந்திரா! ஏன் சோகமுற்றிருக்கிறாய். உனக்குள்ள துயரத்தை நீக்க நான் தேவியை வேண்டுவது முறையல்ல இந்த இராமகிருஷ்ணன் யாரிடமும் எப்பொழுதும் யாசகம் செய்ததில்லை. நீயே வேண்டியவற்றைத் தேவியிடம் கேட்கலாம் என்றார். இரவு மணி ஒன்பது மனம் கடிகாரத்தின் 'பெண்டுலம்' போல மேலும் கீழும் அலைமோதிக் கொண்டிருந்தது. தேவியின் அறை திறந்தது. உட் சென்ற நரேந்திரர் தன்னை மறந்து கண்களில்நீர் ததும்பத் தேவியைத் தொழுது திரும்பினர். நரேந்திரன் வருகையை எதிர் நோக்கி ஆருகிருந்த குருதேவர் நரேந்திரா தேவியிடம் வேண்டினையா? என்றார். குருதேவர், வாசற்படியினுள் செல்லுமுன் என் தரித்திரத்தை அகற்றவேண்டும் என்று தேவியிடம் கேட்க மனம் விழைந்தது. ஆனல் அவருடைய முன்னிலையில் சென்றதும் எல்லா ஆசாபாசங்களையும் மறந்து போயினேன் என்றார் இப்படி மூன்றுமுறையும் சென்று கேட்க விரும்பிய வேண்டுகோளை மறந்து திரும்பியபின் குருதேவர் நரேந்திரனை நோக்கி "இனி நீ உலகப்பற்றிலே உழன்று வாழ்வதற்கு உதித்தவன் அல்லன். உன் இல்லத்தாரை அடைந்த துயரம் அகலும் எனப் புகன்றார்,

### சிறு சம்பவம்

பகவான் இராமகிருஷ்ணர் ஐம்பது ஆண்டுகள் மண்ணுலகில் வாழ்ந்து 1886-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பதினாரும் நாள் மண்ணுலக வாழ்க்கையை நீத்து மாண்புபெற்றார் அதற்கு முன் ஒரு சிறு சம்பவம் நடைபெற்றது. ஒருநாள் நரேந்திரரை நோக்கி "நான் ஒரு யுகத்தில் இராமனாக இருந்தவன். வேறு ஒரு யுத்தத்தில் கிருஷ்ணனுய் இருந்தேன். ஆனல் இந்தக் கலியுகத்தில் இராமகிருஷ்ணனுய் வசிக்கிறேன்" என்றார். இதனை நரேந்திரர் உடனே நம்பவில்லை. சிதைந்துபோன உடலில் எப்படி இராமரும் கிருஷ்ணரும் இருக்கமுடியுமென்று ஐயுற்றார். இது உண்மையாயின் இப்படிப் பகவான் மறுபடியும் வெளியுறுத்தட்டுமென்று வாளாவிருந்தார். நோயுற்று, தளர்ந்து பேசவும் முடியாத நிலையிலே நரேந்திரனின் ஐயத்தை யகற்ற குருதேவர் நரேந்திரனிடம் "நான் அதே ராமன்தான் அதே கிருஷ்ணன்தான் ஆனல் இக்கலியுகத்தே இராமகிருஷ்ணனுகவந்திருக்கிறேன்" என்றுரைத்தார். நரேந்திரனுடைய ஐயம் நீங்கி உள்ளம் தெளிவுற்றது. குருதேவர் கூறியதனைத்தும் உண்மையென்று புலனுகியது.

### முதலாவது சீடன்

இராமகிருஷ்ணர் தன்சக்தி முழுவதையும் நரேந்திரனுக்கு மினசாரம் பாய்ச்சுவதுபோல் பாய்ச்சி மண்ணுலக வாழ்க்கையை முடித்ததும் அவருடைய அறநெறிகளைப் பரப்பும் முதல் சீடனாக விவேகானந்தரை திகழச்செய்தார். 1893-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ம் திகதி அமெரிக்க நாட்டிலே கூடிய உலக சர்வ மத மகாநாட்டிற்குச் சென்றார். எல்லா மதங்களையும் சார்ந்த பலதலைவர்கள் அம் மகாநாட்டிற்கு வந்திருந்தனர். மகாநாடு காலை 10 மணிக்கு தொடங்கியது. விவேகானந்தர் சொற்பொழிவாற்ற வேண்டிய வரிசை எண் 31 ஆனல் அச்சத்தினல் காலை நிகழ்ச்சிகளில் பேச அழைக்கப்பட்டும் சிலர் பேசவில்லை. இதற்கு முன் பேசிய பலரும் தத்தம் மதங்களையே பெரிதும் புகழ்ந்து பேசினர். மாலை நிகழ்ச்சியின் போது விவேகானந்தர் டாக்டர் பரோஸ் என்பவரால் சபைக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். சரசுவதி தேவியை வணங்கி அங்கு குழுமியிருந்த 7000 மக்களைப் பார்த்து "சகோதர, சகோதரிகளே" என்று அழைத்தார். இதனைக்கேட்ட 7000 மக்களும் பெரிமிதமுற்று உலக சகோதரத்துவத்தை விளக்கும் இச் சொற்களைக் கேட்டு ஆரவாரம் செய்யலாயினர். "குழந்தைப் பருவத்தேயுள்ள ஒரு சுதந்திர நாட்டின் மக்களுக்கு வேதநெறியைப் பின்பற்றும் பண்டைய நாடொன்றின் துறவுப் பரம்பரையின் பிரதிநிதியாக நான் அஞ்சலி செலுத்துகின்றேன்" என்றார். எல்லோரும் தத்தம் மதங்களைக் குறுகிய கோணத்திலிருந்து காணமுயன்றபோது, மதங்களின் உட்பொருளாகிய இறைவனை உலகக்கண் கொண்டு பார்த்த பெருமை விவேகானந்தருக்கே உரியது. இந்துமதத்தின் அடிப்படை அறங்களை எடுத்தோதி 'எவர் எபபடி இறைவனை வழிபட்டாலும் அது அவனையே சாரும்' என்னும் பேருண்மையை அம்மகாசபையில் எடுத்து இயம்பினர்.

உலகின் பலபாகங்களுக்குச் சென்று, குருதேவர் இராமகிருஷ்ணர் விட்டுச்சென்ற சமயசமரச கருத்துக்களைப் பரப்பியபின் தாய்நாடு திரும்பி இடைவிடாது உழைத்து 1902-ம் ஆண்டு பரலோக வாழ்வு எய்தினர். அவர் வாழ்ந்த காலம் 39 ஆண்டுகள் 5 மாதங்கள் 24 நாட்களே. ஆனல் சாதித்த சாதனையோ மிகப்பெரிது. அவருடைய நாமம் சேவையும் உலகம் உள்ளளவும் நிலைத்துநிற்கும். ஆவ்வாண்டு

ஐயாறன்

எழுதுவது

"ஆகாசவாணி, திருவையாறு சத்குரு ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகளின் 116-வது புண்ணிய திதியை ஒட்டி, அவரது சமாதி ஆலயத்தின் முன் போட்டுள்ள பிரமாண்டமான பந்தலில் வித்வான்கள் அளிக்கும் இன்னிசை காணிக்கையை அஞ்சல்செய்கிறோம்..." என்றுதைப் பொங்கல்தினத்தன்று தற்செயலாக ரேடியோ பெட்டியைத் திருப்பியதும் கேட்டேன். சொல்ல முடியாத மகிழ்ச்சி.

இந்த விழாவுக்குச் செல்ல வேண்டுமென்று எனக்கு அதிக ஆசை. ஆனல் நமது காருண்ய கவர்மென்டார் போட்டுள்ள தடைகள் காரணமாக, காசு பணம் செலவில்லாமல், தேக சிரமம் எதுவுமில்லாமல் திருவையாற்றிலிருந்து நேரே, காற்றினிலே வரும் இந்த தெய்வீக கீதத்லத இங்கு நாம் வீட்டிலிருந்தே கேட்க முடிகிறது. இந்தியா ரேடியோவைக் கேட்கப்படாது என்று நமது டயஸ் அரசாங்கம் ஓர் ஓடர் போட்டுவிட்டால் நாம் என்ன செய்ய முடியும்? இவ்வித தடையை இன்னும் போடாததற்காக, இந்த அரசாங்கத்துக்கு மனப்பூர்வமான தாங்க்ஸ் கூறிவிட்டு, சென்ற மூன்று நாட்களாக நடைபெற்ற இந்த நிகழ்ச்சிகளில் பெரும்பாலானவற்றைக் கேட்டேன்.

நேரில் சென்றிருந்தால் கூட்டத்தில் வசதியான இடம் கிடைக்குமா என்பது சந்தேகம். இங்கு இரவு 12 மணி வரை வீட்டிற்படுத்துக்கொண்டே கூட வசதியாகக் கேட்க முடிந்தது. இந்த விஞ்ஞான யுகத்திலே எத்தனை இன்பங்கள் வைததாய் என் இறைவா!

* * *

முதல் நாள் காலை 9 ஆதை ராகசுரங்கள் போட்டாபோட்டியுடன் இன்னிசை முழங்கின. பின்னர் பஞ்சரத்ன கீர்த்தனங்களை பல வித்வான்களும் சேர்ந்து கோஷ்டிகானமாய்ப் பாடினர். பல்வேறு இடங்களிலிருந்தும் வந்த இந்த வித்வான்கள், இந்தக் கீர்த்தனையில் சேர்ந்து ஒரே குரலில் பாடமுடிந்தது பெரியகாரியம். பின்னர் சமாதி பூசை. மத்தியானம் 3 மணி முதல் இரவு 12 மணிக்கு மேலும் கச்சேரிகள், கதாகாலக்ஷேபங்கள்.

சில இளம் வித்வான்களுக்கு ஒரே ஒரு கீர்த்தனையை மட்டுமே பாட இடம் கிடைத்தது. அதைப் பெரிய பாக்கியமாகக் கருதி, பக்தியுடனே இசைக் காணிக்கையை அவர்கள் செலுத்தினர். வித்வான்கள் பலரும் தங்கள் சொந்தச் செலவில் அங்கு வருவதுடன், உற்சவ செலவிற்காகப் பணமும் செலுத்தி, பாடிவிட்டுச் செல்வது தமிழ்நாட்டின் மேலான பண்புககு ஒரு சாம்பிள்.

* * *

ஒரு முஸ்லிம் நாதசுர வித்வான் உற்சவத்துக்கு வந்து தியாகராஜ கீர்த்தனைகளை இனிமையாக வாசித்ததைக் கேட்க வியப்பும் மகிழ்ச்சியுமாக இருந்தது. அந்தப் பாடல்களெல்லாம் ராமபக்தியை வலியுறுத்துவதாக இருந்தன.

தெய்வம் ஒன்றே. அவரை ஈஸ்வரனென்றும், அல்லா என்றும், கர்த்தர் என்றும் வெவ்வேறு பெயர்களை வைத்து அழைக்கின்றோம். வெவ்வேறு பெயர்களை வெவ்வேறு மதங்கள் கூறினும், எல்லாம் ஒரே தெய்வத்தையே குறிக்கின்றன

(5ம் பக்கம் பார்க்க)

ஜனவரிமாதம் 17-ம் திகதி முதல் ஓராண்டு வரை சுவாமி விவேகானந்தருடைய நூற்றுண்டு விழாவாகக் கொண்டாட இந்தியா முழுவதும் ஏற்பாடாகியுள்ளது. தாய் நாட்டில் தோன்றிய இந்த ஞான சூரியனை நாம் எப்படி மறக்க முடியும்?

# "என்னை வெளியேற்ற சூழ்ச்சி செய்தார்களா?"

## நிருபர்களிடம் கல்வி அமைச்சர் விளக்கம்

கொழும்பு, புதன்

"பிறர் தூற்றுதலுக்குள்ளாகும் ஓர் இழிவான காரியம் என்னையால் ஆக வேண்டும்; அதனுபின் என்னை வெளியே விரட்டிவிட வேண்டும் என்ற எண்ணம் யாருக்காவது இருந்திருக்கக் கூடுமோ என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால் எப்படியும் இந்தமந்திரிப் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்க வேண்டுமென்ற ஆசை மட்டும் எனக்குக் கிடையாது என்பதை வெளிப்படையாகவே சொல்லி விடுகிறேன்" என்பதாக கல்வி அமைச்சர் ஜனாப் பதியுதீன் மாமூத் சமீப காலத்தில் பாடசாலைகளை அரசாங்கம் கையேற்றது சம்பந்தமாகப் பேசியபோது குறிப்பிட்டார்.

கல்வி அமைச்சரின் காரியாலயத்தில் நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் அவர் இவ்வாறு கூறினர்.

நாட்டின் கல்விக் கொள்கையை பொதுமக்களுக்குத் தெளிவபடுத்துவதற்காகவும் சமீபத்திய பத்திரிகைச் செய்திகளில் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் தவருன எண்ணங்களைப் போக்குவதற்கும் பத்திரிகை நிருபர்களை இவ்வாறு அழைத்துப் பேசினர் அமைச்சர்.

என்னைத் தங்கள் உத்தேசத்துக்கு ஒரு கருவியாக உபயோகிப்பதற்கு யாரோ சிலர் எண்ணியிருந்தார்களென்று நான் தற்சமயம் அனுமானிப்பது மெய்யானல் அந்நாள் இலங்கைக்கு ஒரு துக்கதினமாகப் போகிறது என்றே நான் சொல்வேன என்பதாக கல்வி அமைச்சர் மேலும் கூறினர்.

### கொழும்பு நிலைமை

நாடெங்கிலும் ஆரம்பப்பாடசாலைகளில் சேருவதற்கு முன் வரும் அத்தனை பிள்ளைகளும் கல்விகற்பதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறதென்றும் பாடசாலைகளில் இடம் கிடைப்பது அரிதாயிருக்கிறதென்ற பேச்சுக்கு இடம் எழவில்லையென்றும் கல்வி அமைச்சர் பத்திரிகை நிருபர்களிடம் மேலும் கூறினர்.

பாடசாலைகளில் சேர்வதற்கு கொழும்பில் மட்டும் 1500 பிள்ளைகள் மாகாண கல்வி அதிகாரிக்கு விண்ணப்பித்திருந்தாயும் அத்தனை பேருக்கும் பாடசாலைகளில் இடம் கிடைத்திருப்பதையும் அவர் கட்டிக்காட்டினர். பெருந்தொகையான பிள்ளைகளுக்கு கல்விகற்கும் வசதி தேவைப்படுமென்பதை எதிர்பார்த்து கொழும்பு நகரிலும் நகரைச்சுற்றிலும் 6 புதிய ஆரம்பப் பாடசாலைகள் அமைக்கப் பெற்றிருப்பதையும் இங்கெல்லாம் நூற்றுக்கணக்கான பிள்ளைகளுக்கு இன்னும் இடவசதி காத்திருப்பதையும் அவர் மேலும் குறிப்பிட்டார். வித்தியாபகுதியார் ஆயிரக்கணக்கான பிள்ளைகளுக்கு பள்ளிக்கூடக் கதவுகளை அடித்து மூடிவிட்டார்கள் என்பதுபோன்ற அபவாதங்கள் இனிப் பேச்சளவில் கூட எழுவதற்கு இடமிருக்காது என்றும் போதியளவு சராசரி இல்லாமலே மூன்று பாடசாலைகளை வித்தியாபகுதியினர் கொழும்பில் தொடர்ந்து நடத்திவர வேண்டியதாயிருக்கிறதெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையின் இலவசக் கல்வித்திட்டத்தைக் குறிப்பிட்டுப் பேசுகையில் இம்மாதிரியாக இலவசக்கல்வி உலகில் வேறெந்த நாட்டிலும் அளிக்கப்படவில்லையென்றும் நமது பிள்ளைகள் அத்தனைபேருக்கும் கல்வி அளிக்க வேண்டுமென்ற மனப்பான்மை எங்களுக்கிருப்பதைப் போல ஆசியாவில் வேறெந்த நாட்டினருக்கும் கிடையாது எனவும் அமைச்சர் கூறினர்.

# "அரசியலுக்கு இடமில்லை"

## சனசமூக நிலைய கூட்டத்தில் பேச்சு

சுழிபுரம், செவ்வாய்

"சனசமூக நிலையங்கள் உண்மையான ஓர் மக்களியக்கமாகும். பல்வேறு அரசியற் கொள்கையாளர்களையும் ஒன்று படுத்திச் சமூக முன்னேற்றத்திற்கான துறைகளில் ஈடுபடுத்தும் சக்தி இவ்வியக்கத்துக்குண்டு. கலை, கலாச்சார வளர்ச்சிக்கான பணிகளில் ஈடுபடும்போது அரசியல் பிரச்னைகளுக்கோ வேற்றுமைகளுக்கோ நாம் இடமளிக்க வேண்டியதில்லை."

சுழிபுரம் கலைமகள் சனசமூக நிலையத்தின் மூன்ருவது ஆண்டுவிழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரை நிகழ்த்திய யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசச் செயலாளர் திரு. த. துரைசிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். நிலையத் தலைவர் ஆசிரியர் திரு இ. சதாசிவம் இவ்விழாவுக்குத் தலைமை வகித்தார். திரு. துரைசிங்கம் தொடர்ந்து பேசுகையில் அரசியல் வேற்றுமைகளினால் இன்று சமூக முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாகவும் கலை, இலக்கிய வளர்ச்சிக்கான துறைகளில் கூடச்சிலர் அரசியல் முத்திரைகளைப் பொறிக்க முனைவது கவலைக்குரியதென்றும் கூறினர்.

நிலையச் செயலாளர் திரு. மு. தம்பிஐயா பேசுகையில் சனசமூக நிலைய இயக்கம் வடபகுதியிலாற்றி வரும் சேவைகள் பாராட்டுக்குரியனவென்று கூறினர்.

கிராமசபை உறுப்பினர் திரு.மு. வரதராசா, திரு. மகாதேவன் ஆகியோருட்பட மற்றும் பலரும் பேசினர். நிலையத்தினல் நடாத்தப்பட்ட திருவெம்பாவை மனனத்தேர்வில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை திரு. மு. வரதராசா வழங்கினர். ஈற்றில் நிலையத்தின் புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. சு. கந்தசாமி (சுழிபுரம் கி. ச. தலைவர்), தலைவர்: திரு. இ. சதாசிவம் (ஆசிரியர்), உப-தலைவர்கள்: திரு. க இளையதம்பி, திரு. மு. தர்மலிங்கம், செயலாளர்: திரு. மு. தம்பிஐயா (ஆசிரியர்), உப-செயலாளர்: திரு. வே. நடேசு, பொருளாளர்: திரு. சி. கந்தசாமி.

# ரயில் பாதையில் இரும்பு ஆணி

## சதிநடவடிக்கை?

கொழும்பு, புதன்

மன்னம்பிட்டிய ரயில் பாதையில் கடந்த திங்கள்கிழமை மாலை ஆறு அங்குல நீளமான ஒரு இரும்பு ஆணி செருகப்பட்டிருந்ததின் மர்மத்தை பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர். இரும்பு ஆணி செருகப்பட்டிருந்ததைக் கவனிக்காமலிருந்தால் ரயில் வண்டி தடம்புரளக்கூடிய ஆபத்தை அது விளைவிக்கக் கூடுமென பொலிசார் நம்புகின்றனர். ஆகவே இதைச் சுற்றி ஏதும் சதிநடவடிக்கை இருக்கக் கூடுமெனவும் அவர்கள் சந்தேகப்படுகின்றனர். மட்டக்களப்பு பாதையில் 169 வது மைல்கல் தொலைவில் இது கண்டுபிடிக்கப்பட்டது. அன்று பிற்பகல் இடைநேரத்தில் ஓடும் குறுகல் பாதை ரயில் வண்டி ஒன்றின் சாரதி இதைக் கண்டுபிடித்தார்.

# செய்தித் திரட்டு

### பொங்கல் விழா

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் கலாஜோதி சனசமூக நிலையம் பொங்கல் விழாவைச் சிறப்பாகக்கொண்டாடியது. கருத்தரங்கமும் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

∴ ∴ ∴

### நீர் வடிகிறது

மன்னுர், புதன்

மன்னுர் சிலாபத்துறை வீதியில் உள்ள அருவியாற்றுத் தாம்போதியில் 5 அடி நீர் குறைந்துள்ளது. தொடர்ந்து பெய்த மழையால் 12 அடி நீர் தேங்கியிருந்தது. தொடர்ந்து பெய்த மழையால் முருங்கனில் அநேகமான கால்நடைகள் இறந்துவிட்டன என்று தெரிகிறது.

∴ ∴ ∴

### சனசமூக நிலைய நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, புதன்

நாரந்தனைக் கிராமசபை எல்லைக்குட்பட்ட சரவணை-நாரந்தனை ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம், சரவணை-நாரந்தனை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி மடத்தில் முன்னுள் கிராம சபை அங்கத்தவர் திரு. வே. இராசையா தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வே. இராசையா, காரியதரிசி: திரு. க. பேரின்ப தாசன், கணக்காளர்: திரு. க. குமாரசாமி.

∴ ∴ ∴

### கற்கோவள உற்சவம்

பருத்தித்துறை, புதன்

கற்கோவளம் அர்ச். செபஸ்தியார் ஆலய வருடாந்த உற்சவ விழாக்கள் திங்கட்கிழமை ஆரம்பமாகின. ஞாயிறன்று காலை முடிவடையும் இவ்விழாவின் முதல்நாள் மாலை அர்ச். செபஸ்தியார் திருவுருவ சுற்றுப்பிரகாரமும் அன்னதானமும் நடைபெறும்.

∴ ∴ ∴

### சுதந்திர தொழிற்சங்கம்

பருத்தித்துறை, புதன்

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ தொழிலாளர்கள் மத்தியில் சுதந்திரக் கட்சித் தொழிலாளர் சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

∴ ∴ ∴

### சிறுபான்மைத் தமிழருக்கு வட்டாரம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் மாநகர சபையில் சிறுபான்மைத் தமிழர் சமூகத்தினருக்கு போதிய பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லையெனவும் அச்சமூகத்திற்கு ஒரு வட்டாரம் மட்டும் ஒதுக்கப்பட்டிருப்பது நியாயமானதாகாதெனவும் யாழ்ப்பாணம் மக்கள் முன்னேற்ற மன்றம் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளது. உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பவைக்கப்பட்டுள்ள கடிதத்தில், யாழ்ப்பாணம் மாநகரசபை உளளடங்கிய வட்டாரங்களில் கால் பங்கினர் சிறுபான்மைத் தமிழர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். மாநகரசபை 17 வட்டாரங்களாக்கும்போது சிறுபான்மைத் தமிழருக்கு நான்கு வட்டாரங்களாவது ஒதுக்கித் தரவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

∴ ∴ ∴

### ஆண்டு விழா

புங்குடுதீவு, புதன்

வெள்ளிக்கிழமை புங்குடுதீவு சிவலபிட்டி சனசமூக நிலையத்தின் நான்காவது ஆண்டு நிறைவுவிழா கொண்டாடப்படவிருக்கிறது. விழாவிற்கு தீவுப்பகுதி எம். பி, திரு. வி. ஏ. கந்தையா தலைமைவகிப்பார். அறிஞர்கள் பலர் உரை நிகழ்த்துவர்.

∴ ∴ ∴

### பஜனை சுற்றுலா

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் தெற்கு சனசமூக நிலையம் தைப்பொங்கல் பஜனைச் சுற்றுலாவை வெகு சிறப்பாக நடத்தியது. தேவார பாராயணம், சொற்பொழிவுகள் என்பனவும் நடைபெற்றன. இப்பஜனைச் சுற்றுலாவில் கிறிஸ்தவ வாலிபர்களும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

# 'கிராம மக்களின் வாழ்க்கை தரம் உயரவேண்டும்'

## —முதலியார் தியாகராசா

சங்கானை, புதன்

'கிராம அபிவிருத்தி இயக்கத்துடன் அரசாங்கம் சிரத்தையற்ற முறையில் நடந்து கொள்ளும் விதம், தேசிய அபிவிருத்தியுடன் எவ்விதத்திலும் ஒத்துவராது.' என்று அண்மையில் சங்கானையில் நடைபெற்ற வலிகாமம் மேற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் சங்கத்தின் தலைவர் கேட்முதலியார் சி. தியாகராஜா பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், கிராமமக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தால் மட்டுமே இலங்கை முன்னேற்றமடையுமென்றும் கிராம மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டுமென்ருல், கிராம அபிவிருத்தி இயக்கத்துக்கு அரசாங்கம் முக்கியத்துவமளிக்க வேண்டுமென்றும் கூறினர்.

அவர் மேலும் பேசியதாவது: 'கிராம அபிவிருத்திக்கென அரசாங்கம் ஒதுக்கிய நிதி குறைக்கப்பட்டிருப்பது குறித்து நான் வேதனைப்படுகின்றேன். அரசாங்கத்தின் போதிய நிதி உதவி கிடைக்காததகாரணத்தினல் கிராம அபிவிருத்தி இயக்கம் பல நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளது. அரசாங்கம் இப்பொழுது, தனது ஒப்பந்தங்கள் எல்லாவற்றையும் கூட்டுறவுச் சங்கங்களிடமே கொடுக்கிறது. கூட்டுறவு இயக்கம், ஒரு மக்களின் இயக்கம் என்பது உண்மையாக இருந்தாலும் அது ஒரு லாபம் தரக் கூடிய ஒரு இயக்கமே.

ஆனல், கிராம அபிவிருத்தி இயக்கம் லாபம் தரக் கூடிய இயக்கமாக இல்லாவிடிலும், ஆரோக்கியமான கிராம சமூகத்தினரைஉருவாக்குவதில் தன்னல் இயன்றவரை பாடுபடுகிறது.

பருத்தித்துறையில் அண்மையில் இருமந்திரிகளுக்குஅளிக்கப்பட்ட வரவேற்பின்போது நடைபெற்ற சம்பவத்தின் போது எங்களது எம். பிக்கள் பலர் காயமடைந்தனர். இச்சம்பவம் குறித்து எந்தக் கட்சிமீது குறையிருக்கிறது என்று சொல்ல முடியாது. இந்த நாட்டிலுள்ள இரு பெரும் சமூகத்தினரிடையே நீண்டகாலமாக நல்லுறவுகள் இருந்து வந்திருக்கிறது. இலங்கையிலுள்ள பெரும் சமூகத்தினர், தங்களது விரோத மனப்பான்மையை நீக்கி, தமிழர்களின் அச்சத்தைப் போக்கி சகோதரர்களாக வாழ்வதற்கு முயற்சிக்குமாறு நான் கேட்டுக் கொள்கின்றேன்."

மாவட்ட பதிவுக் காரியதிகாரி திரு. டி. டபிள்யு. செல்வரத்னம், திரு. அருள்நாயகம், திரு. பாலசுந்தரம் ஆகியோரும் பேசினர்.

புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: கேட் முதலியார் சி. தியாகராசா, உபதலைவர்கள்: திரு. ஏ. தயாள்பாகர், திருமதி கே. மருதலிங்கம், காரியதரிசி: திருமதி உருத்ரா குமாரசாமி, தனதிகாரிகள்: திரு. வி. நடராசா, திருமதி பேர்லி அதானிசியார்.

# ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அல்லவா? இந்த நல்லுணர்ச்சி எமக்கு ஏற்பட்டுவிட்டால், நாம் யாரும் மதத்தின் பெயரால் சச்சரவிட்டுக் கொள்வோமா? உலகிலே மதச் சமரசம் ஏற்பட்டுவிட்டால், உலக மக்கள் ஒரு குடும்பம் போல் ஒற்றுமையாக வாழலாமல்லவா?

அவ்வித சமரசம் வரும் நாள் நெருங்கி வருகிறதென்பதற்கு, அந்த இஸ்லாமிய அன்பர் அங்கு வந்து நாதசுர இன்னிசைக் காணிக்கையைச் செலுத்தியது, புதிய நம்பிக்கை அளிக்கும் நல்லதோர் சகுனமாக இருந்தது.

* * *

இதில் மற்ருெரு விசேஷமென்னவென்ருல், தியாகராஜர் பாடியதெல்லாம் தமது தாய்மொழியான தெலுங்கில். அந்த அருமையான கீர்த்தனைகளை, தமிழர்களே விருப்புடன் கற்று ஆந்திரர்களைவிட மேலான முறையில் பாடுவது தான். மொழி வேற்றுமையைச் சிறிதும் பாராட்டாமல், ஸ்ரீ தியாகராஜ இசைச் செல்வத்தைப் போற்றி வளர்ப்பவர் பெரும்பாலும் தமிழரே. இது அவர்களது மேலான பண்புக்கும் விரிந்த் மனப்பான்மைக்கும் எடுத்துக்காட்டல்லவா?

மூன்று நாட்களிலும் வந்தவர்களுக்கெல்லாம் அன்னதானம். முன்னர் இந்த உற்சவம் 10 நாட்கள் நடக்கும். இப்போது மூன்று நாட்களுக்குக் குறைந்துவிட்டது. என்ருலும் இலவசமாகச் சாப்பாடு போட்டு, செவிக்கும் மேலான விருந்தை இலவசமாக அளிக்கும் முறை வேறெந்த நாடுகளிலும் உண்டா? இதைப்பற்றி ஜெர்மன் சுவாமி எனும் கௌரி பாலாவைக் கேட்டேன். அன்னதான வழக்கம், ஜெர்மனியிலோ மேற்கிந்திய நாடுகளிலோ கிடையாதென்ருர். அதைக் கேட்டதும் நமது இந்த மேலான பண்பைப்பற்றி மிகவும் பெருமை கொண்டேன். அதை மறந்து, மெதுவாகக் கைவிட்டு வருகிறோம். இதை மீண்டும் கைக்கொண்டால், எல்லோரும் பசிபட்டினியின்றி இன்புற்றிருக்க வகைசெய்ய முடியாதா?

* * *

இந்த விழா ஆரம்பத்தில், இந்திய வானொலி அன்பர், திருவையாறு தலத்தைப் பற்றியும், இயற்கை வனப்பைக் குறித்தும், தேவாரங்களிலிருந்து மேற்கோள் காட்டி அழகாக வர்ணித்தார். அங்கு கோயில் கொண்டுள்ள அறம் வளர்த்த நாயகி சமேத ஐயாறப்பரின் அருளைப்பற்றியும் போற்றியதைக் கேட்க என் மனம் பூரித்தது. ஒரு சின்ன ரகசியம். அந்த ஐயாறனின் அருளால் தான், அவரால் தான் இதையெல்லாம் இப்பத்திகளில் எழுதியும் வருகின்றேன்.

# இலங்கைப் பல்கலைக் கழகக் குழு

## இந்தியா செல்லும்

கொழும்பு, புதன்

இந்திய சர்வகலாசாலைகள் மேற்கொண்டிருக்கும் நடைமுறைத் திட்டங்களை நேரில் பார்த்துத் தெரிந்துகொள்வதற்காக இம்மாதம் 24-ம் திகதி இலங்கைப் பல்கலைக்கழகங்களின் விசாரணைக் குழு ஒன்று இந்தியாவுக்குப் பிரயாணமாகும் சென்னை, கல்கத்தா, பம்பாய், டில்லி, காசிநானந்தா ஆகிய இடங்களிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு இக்குழுவினர் செல்வார்களென்றும் இரண்டுவாரகாலம் இந்தியாவில் தங்குவார்களென்றும் தெரிவிக்கப்பட்டது. திரு. டி. எபி. ஆர். குணவர்த்தன, திரு. டி. இ. விஜயவர்த்தன ஆகிய இருவரும் குழுவின் அங்கத்தினர்களாவர்.

# "வேற்றுமை விலகினலே முன்னேற்றம்"

## கி. ச. உபதலைவர் பேச்சு

உடுப்பிட்டி, புதன்

கரணவாய் வடக்கிலுள்ள வளர்மதி விளையாட்டுக் கழகம் பொங்கல் தினத்தை உருட்டாவலவட்டையில் வெகுசிறப்பாகக் கொண்டாடியது.

பல கலாநிகழ்ச்சிகளும் விளையாட்டுப் போட்டிகளும் இதில் இடம்பெற்றன. நடைபெற்ற வேகநடைப்போட்டியில் திரு. கணபதிப்பிள்ளை என்ற 85 வயது வயோதிபர் முதல் பரிசு பெற்ருர்.

விளையாட்டுப் போட்டிப்பரிசுகளை வழங்கிய உடுப்பிட்டி கிராமச்சங்க உப-தலைவர் திரு எம். யோகலிங்கம் ஜே. பி. பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

'இந்த விழாவை சிறுபான்மையோர் ஏற்பாடு செய்திருந்தாலும் இந்து சாதிவித்தியாசமின்றிப் பெரும்பான்மை மக்கள் பெருந்தொகையாகக் கலந்து கொண்டது மிக்க மகிழ்ச்சிக்குரியதொன்று. எம்மிடையே இருந்து வரும் இந்த விரும்பத்தகாததும் நமது முன்னேற்றத்துக்குத் தடையாய் இருப்பதுமான இந்த சாதிப் பூசல்களை ஒழித்துக்கட்ட இவ்விதம் கொண்டாடப்படும் பொங்கல் விழாக்கள் பெரிதும் உதவுகின்றன என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

நாம் குறுகிய மனப்பான்மைகளைக் கைவிட்டு பரந்த அடிப்படையில் வாழப் பழகிக்கொள்ளவேண்டும். அப்பொழுது தான் நமது இனம் ஒருமைப்படமுடியும். தலை நிமிர்ந்து நிக்க முடியும். இந்த பொங்கல் விழாவை இவ்வளவு சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்தவர்களை நாம் பாராட்டாது இருக்க முடியாது.

பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஆறுமுகம் கரணவாய் வடக்கு கிராமவிதானை திரு. இரத்தினசிங்கம் ஆகியோரும் பேசினர்.

# "அரசாளும் வாய்ப்பு இனி அவர்களுக்கு இல்லை"

## யு. என். பி. மீது கண்டன மாரி

எட்டியாந்தோட்ட, செவ்.

"கொழும்பு முனிசிபல் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சியினர் பெரும் வெற்றியடைந்திருப்பது என்னவோ உண்மைதான். ஆனல் அதைக் கொண்டு அவர்கள் இந்நாட்டை ஆளும் கட்சியாக இனி எப்போதாவது திரும்பவும் அதிகாரத்தைக் கைப்பற்றுவார்கள் என்றுமட்டும் நம்பிவிடாதீர்கள்" என்பதாக கிரியல்ல எம். பி. திரு. பி. பி. விஜயசுந்தரா கொடவெலையில் டாக்டர் என். எம். பெரேரா தலைமையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசியபோது கூறினர். அத்தகையதொரு மீட்சி சம்பவிக்க இந்நாட்டிலுள்ள எதிர்க்கட்சியினரும் ஏழை மக்களும் ஒருபோதும் விடமாட்டார்கள். தங்களுக்குத் தாமே புதைகுழி தோண்டிக்கொள்ள மாட்டார்கள் என்று அவர் மேலும் கூறினர்.

முனிசிபல் சபை அங்கத்தவரான ஸ்ரீமதி விவியன் குணவர்த்தன பேசுகையில் ஐக்கிய தேசியக் கட்சியினர் அரசாண்ட காலத்தில் தாங்கள் எப்படி நடத்தப்பட்டார்களென்பதை இலங்கைப் பெண்மணிகள் ஒருபோதும் மறந்துவிடமாட்டார்கள் என்றும் 1956 முதல் ஏழை மக்கள் அடைந்த உரிமை, சலுகைகள் என்பனவெல்லாம் யு. என். பி. யினர் திரும்பவும் அதிகாரத்துக்கு வந்தால் அடியோடு மறைந்தொழிந்துவிடும் என்றும் கூறினர்.

---

## கலைக்கழக பரிசுத்தொகை இன்னும்வந்துசேரவில்லை?

யாழ்ப்பாணம், புதன்

இலங்கைக் கலைக்கழகத்தின் தமிழ் நாடகக் குழு கடந்த வருடம் நடத்திய நாடகப் போட்டியில் பரிசு பெற்றவர்கள் இருவரையும் தமக்குரிய பரிசுத் தொகையைப் பெற்றுக்கொள்ளவில்லை. இதனல் அவர்கள் அதிருப்தியடைந்திருப்பதாகத் தெரிகிறது.

தமிழ்நாடகக்குழு நடத்திய நாடகப் போட்டியில் முதற் பரிசு ரூ. 500, இரண்டாம் பரிசு ரூ. 300, மூன்ரும் பரிசு ரூ. 200 பெற்ற நாடகாசிரியர்கள் கடந்த நவம்பர் மாதம் 5-ம்திகதி கொழும்பு ஹவ்லாக்டவுனில் நடந்த நாடக விழாவில் தமக்குரிய பரிசுப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்டனர். பின்னர் அவர்களுக்கு பரிசுத் தொகையை அனுப்புவதற்காகக் கைச்சாத்திட்டு அனுப்பும்படி அனுப்பப்பட்ட 'வவுச்சர்கள்' அனுப்பி இரண்டு மாதத்திற்கு மேலாகியும் பணத்திற்குரிய "செக்கு"கள் இன்னும் அனுப்பி வைக்கப்படவில்லையாம்.

தமக்குரிய பரிசுத் தொகையான பணம் இன்னும் கிடைக்கவில்லை என்று அவர்கள் கலைக் கழகத் தமிழ் நாடகக் குழுவுக்குப் பல கடிதங்கள் எழுதியும் எதுவித பதிலும் கிடைக்கவில்லையாம். இது சம்பந்தமாக பரிசு பெற்ற நாடகாசிரியர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

---

## ஆட்சிக் குழுவில் பிற்போக்கு சக்திகள்

### உதவி அமைச்சர் எச்சரிக்கை

குருணகலை, புதன்

45 ஆண்டுகாலமாக சோஷலிஸம் ஆட்சியிலிருந்துவரும் சோவியத் நாட்டிலேயே இன்னும் அனுகூலமாகாத காரியங்கள் எவ்வளவோ உள்ளன. அங்கேயில், ஆறு ஆண்டுகளுக்கு முன்பாக சோஷலிஸப் பாதையில் அடியெடுத்து வைத்த இலங்கையில் அதற்குள்ளாக அரும்பெரும் சாதனைகளை நாம் எப்படி எதிர்பார்க்கமுடியும் என்று குருணகலை எம். பி. திரு. ஜயபத்தி ரால மீரிகமைக்குச் சமீபமாக உள்ள மீவிதியாவில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசியபோது குறிப்பிட்டார்.

இன்றைய அரசாங்கம் பொதுமக்களுக்காக உழைப்பதற்கே எப்பொழுதும் காத்திருக்கிறதென்றும், குடிமக்கள் ஆட்சி ஒன்றை நிறுவுவதே அதன் கனவாயிருக்கிறதென்றும் அவர் மேலும் கூறினர்.

நீதிமந்திரியின் உதவிக் காரியதரிசி திரு. அசோக கருணரத்ன இக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் இன்றைய ஆட்சிக்குழுவில் பிற்போக்கான சக்திகள் நுழைந்திருப்பதைக் குறிப்பிட்டு பலம்படைத்த முதலாளிகளான இவர்கள் திரும்பவும் தலைதூக்க எத்தனிப்பதையிட்டு பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

# வாக்களித்தது எல்லாம் என்ன ஆயிற்று?

## மன்னர் கூட்டத்தில் திரு. கெனமன்

மன்னர், செவ்வாய்

"அரசாங்க சேவையிலிருப்பவர்கள் என்றும் மனக்கசப்புடன் வாழ்பவர்கள் என்று பேசிக்கொள்வது வழக்கம். மன்னரிலுள்ள அரசாங்க சேவை யூனியனில் குறைபாடுகளை நான் காணமுடியவில்லை. இது எனக்கு அதிக மகிழ்ச்சி தருகிறது" என்பதாக இலங்கைப் பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த திரு. பிட்டர் கெனமன் எம். பி. அரசாங்க ஊழியர் சங்கத்தின் மன்னர் கிளைக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு பேசியபோது குறிப்பிட்டார். எம். செய்யது தலைமையில் இக்கிளைச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் இங்குள்ள முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

திரு கெனமன் தொடர்ந்து பேசுகையில் 1956 முதல் அரசாங்கத்தினல் வாக்களிக்கப்பட்டுவந்த அவசியமான பல மறுதல்கள் இன்னமும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படாமலிருப்பதை குறிப்பிட்டார். உதாரணமாக 1958 முதல் அரசாங்க ஊழியரின் வேதனம் இருந்தபடியே இருந்து வருவதையும் அதே சமயம் வாழ்க்கைச் செலவினமோ அதிகரித்துக் கொண்டுவந்திருப்பதையும் அவர் குறிப்பிட்டு "செய்திருப்பதெல்லாம் மேலெழுந்தவாரியான வெறும் கண்துடைப்பு காரியங்கள் தாம்" என்ருர்.

அரசாங்க ஊழியருக்கும் ஆசிரியருக்கும் அரசியல் உரிமைகள் வழங்க மறுக்கப்பட்டிருப்பதையும் குறைந்த தரத்திலுள்ள சிப்பந்திகளின் நியாயமான கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவிசாய்க்காதிருந்து வருவதையும் திரு. கெனமன் மேலும் குறிப்பிட்டார்.

---

## "தேசம் குடிமுழுகிப் போய்விடாது"

கொழும்பு, புதன்

நாட்டில் நிதி நெருக்கடி ஏற்பட்டிருப்பது மெய்தான். ஆனல் தேசம் அதனல் அடியோடு மூழ்கிப் போய்விடும் ஆபத்தில் இல்லை என்று சுதந்திரக் கட்சி எம். பி. யான அல்பரட் கரியாசம் இங்கு ஒரு கட்டடத்திறப்பு விழாவையொட்டி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசியபோது குறிப்பிட்டார்.

தேசத்தின் நிதிநிலையை ஸ்திரப்படுத்த தேயிலை, ரப்பர், தென்னை போன்ற இங்குள்ள இயற்கை சம்பத்துக்களால் கிடைக்கும் வருமானம் போதியதாகயிருந்த போதிலும் இவற்றைதகுந்தபடி பாதுகாத்து வைகக் கடந்த காலத்தில் யாதொரு வழிவகைகளும் செய்யப்பட்டிருக்கவில்லை என்றும் இவர் தெரிவித்தார்.

---

## கோண்டாவில்சந்தியில் பஸ் மோதல்

### பிரயாணிகள் அவதி

யாழ்ப்பாணம், புதன்

நேற்றுமாலை காங்கேசன்துறை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் கோண்டாவில் சந்திக்கருகில் இரு பஸ் வண்டிகள் மோதிக்கொண்டதால் இந்த இருபஸ்களிலும் பிரயாணம் செய்த சுமார் 80 பிரயாணிகள் தமது பிரயாணத்தைத் தொடர்ந்து செய்யமுடியாது சிறிதுநேரம் அவதிக்குள்ளானர். கீரிமலையில் இருந்து புறப்பட்ட பஸ்வண்டியில், தெல்லிப்பழையிலிருந்து புறப்பட்ட பஸ்வண்டியும் மல்லாகத்திலிருந்து ஒன்றை ஒன்று முந்துவதும் பிந்துவதுமாக வந்தனவென்றும் கோண்டாவில் சந்தியில் ஒரு பஸ சமிக்ஞை செய்து ஆட்களை இறக்க நின்றதாகவும் பின்னல் வந்த பஸ் சாரதி அதனை விலத்தி முன் செல்ல முயன்றபோதே இரு பஸ்களும் மோதிக்கொண்டன. இரு பஸ்களுக்கும் சிறிது சேதமேற்பட்டுள்ளது. பஸ் வண்டிகள் ஸ்தலத்திலே நிறுத்தப்பட்டுவிட்டதால் வீதியில் போக்குவரத்துத் தடைப்பட்டது. இருபஸ்களிலும் பிரயாணம் செய்துவந்த பிரயாணிகள் சுமார் அரைமணி நேரத்தின் பின்னர் வந்த மற்றொரு பஸ்ஸில் அனுப்பப்பட்டனர். இதுசம்பந்தமான விசாரணை நடைபெறுகிறது.

முடிக்குரிய காணிகளில் பயிர்ச் செய்கை

# அரசாங்க உத்தியோகத்தர் தற்காலிக வேலை நீக்கம்

கொழும்பு, புதன்

பயிர்ச் செய்கைக்கு ஒதுக்கப்படாமலிருந்த முடிக்குரிய நிலமான 600 ஏக்கர் காட்டை வெட்டி அதில் நெல் பயிரிட்ட விவசாயப்பகுதி உத்தியோகஸ்தர்கள் பலருக்கு விவசாய இலாகாவினல் தற்காலிகமான வேலை நீக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கந்தளாய் சீனி உற்பத்தி ஆலைக்காக காடுவெட்டிச் சீர்படுத்தும் பொறுப்பை ஏற்றிருந்த இவர்கள் அவ்வேலைக்கு உபயோகப்படுத்தப்பட்ட அதே இயந்திர சாதனங்களைக் கொண்டு மேலும் 600 ஏக்கர் காட்டைத் தாங்கள் சொந்த எண்ணப்படி நெல்பயிரிடுவதற்கான முறையில் சீர்படுத்தினர்களென்று விவசாய இலாகாவைச் சேர்ந்த ஒரு தொழிற்சங்கம் குற்றம் சாட்டியதோடு இதுவிஷயத்தையும் வெளிப்படுத்தியிருந்தது.

அரசாங்கத்துக்குரிய இயந்திரசாதனங்களையும் தொழிலாளர்களையும் இவ்விதமாக உத்தரவு பெருமல் உபயோகப்படுத்திக் கொள்ளும் வழக்கத்தை முற்ருக நிறுத்தவேண்டுமென்றும் இதுசம்பந்தமாக கடுமையான நடவடிக்கையெடுக்க உத்தேசித்திருப்பதாயும் விவசாயப்பகுதி அமைச்சர் திரு. சி. பி. டி' சில்வா கூறியுள்ளார்.

இதேமாதிரி, அனுமதிபெருது காடுவெட்டிய மற்றொரு சம்பவம் தாமன்கடுவைப் பகுதியிலும் நடைபெற்றிருப்பதை அமைச்சர் சுட்டிக்காட்டினர்.

---

## கள்ளு விலை அதிகரிப்பு

மககோண, புதன்

அளுத்கம கள்ளுத் தவறணையில், ஒரு போத்தல் கள்ளின் விலை ரூபா 1-50 க்கு அதிகரித்திருப்பதால் இத்தவறணைக்குச் செல்லும் 'கள்ளுப் பிரியர்கள்' தவறணைக்குச் செல்வதில்லையென்றும் கள்ளின் விலை குறையும்வரை பகிஷ்கரிப்பதென்றும் முடிவுசெய்துள்ளனர். இதனல் கள்ளு விற்பனையாளர்களுக்கு பெரும் கஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

குறிப்பிட்ட இத்தவறணையில் முன்னர், ஒரு போத்தல் கள்ளு 50 சதத்துக்கு விற்பனையானது. ஆனல் இப்பொழுது ரூபா 1-50 ஆக அதிகரித்துள்ளது.

கள்ளு விற்பனைக்கு கலால் இலாகாவின் கட்டுப்பாட்டு விலை இல்லையென்றும் இதனல், கள்ளு விற்பனையாளர்கள் தாங்கள் விரும்பும் விலையைக் குறிப்பிடலாமெனவும் தெரிகிறது.

---

## நாட்டுக்கூத்து நடத்த ஏற்பாடு

திருக்கோணமலை, செவ்வாய்

தம்பலகமத்தில் பாரம்பரியமாக நடைபெற்றுவரும் நாட்டுக்கூத்து இவ்வருடமும் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக திரு வி. கணபதிப்பிள்ளை தலைமையில் ஓர் செயற்குழு தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இந்த நாட்டுக்கூத்து தைப்பூசத்தினத்தன்று நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## விசாரணை ஒத்திவைப்பு

திருக்கோணமலை, செவ்வாய்

உப்புவெளியைச் சேர்ந்த வென்னீர்க் கிணற்றுக்கு அருகாமையிலுள்ள சில பகுதிகளைத் திருத்தும் செய்கையில் ஈடுபட்டு இருந்த கிராமச் சங்கத் தலைவர் திரு. நா. கைலாயநாதனையும் மற்றும் சில தொழிலாளர்களையும் பயமுறுத்தியதாகவும், வேலைகளைத் தொடர்ந்து செய்யவிடாமல் தடைசெய்ததாகவும் உப்புவெளிக் கிராமசபையினரால் தொடரப்பட்ட வழக்கு திருக்கோணமலை நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரிகளான திரு. சின்னத்துரை, திரு. பாண்டியன், திரு. எஸ். கனகசபாபதி ஆகியோர் சமுகமளித்திருந்தனர். திருகோணமலை நீதிபதி திரு. சிறிட் அமரசிங்க விசாரணையை ஒத்திவைத்தார்.

---

## மூதூரில் போக்குவரத்துக் கஷ்டம்

திருக்கோணமலை, செவ்வாய்

மூதூர்ப் பகுதியில் கடந்த ஒருவாரமாகத் தொடர்ந்து பெய்து வரும் இடைவிடா மழையினல் ஈச்சிலம்பத்தைக் கிராமத்தின் போக்கு வரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. இதனல் ஈச்சிலம்பத்தை மக்கள் வெளி இடங்களுக்குச் செல்ல முடியாதவர்களாய் கஷ்டமுறுகின்றனர். கிரிவெட்டி ஆற்றில் நீர் அதிகமாக ஓடுவதால் வாகனங்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையிலுள்ளது. இவற்றை மூதூர் எம். பி. க்களான ஜனப். ஏ. எல் ஏ. மஜீத், ஜனப். எம். ஈ. எச். முகமத அலி, மூதூர்க் காரியாதிகாரி திரு. கே. செல்வரத்தினம் ஆகியோர் பார்வையிட்டனர்.

---

## வீதிதிருத்தும் வேலை ஆரம்பம்

திருக்கோணமலை, செவ்வாய்

உப்புவெளிக் கிராமசபை தான் வசூலித்த நிதி மூலம் அன்புவழிபுரம், பாலையூற்று வீதிகளை ஓர் புதிய வீதியாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. வென்னீர் கிணறுகளுக்கருகாமையிலும் சில திருத்த வேலைகளை இந்த நிதி மூலம் ஆரம்பித்துள்ளது. கன்னியாய், செம்பியனுறு வீதிகளும் இந்நிதி மூலம் திருத்தப்படலாமெனத் தெரியவருகிறது. கன்னியாய் செம்பியனுறு வீதிகள் பழுதடைந்த நிலையில் இருந்து வருவதனல் அவை திருத்தும் வேலை விரைவில் ஆரம்பிக்கலாம் எனத் தெரியவருகிறது.

---

## 'பேச்சுரிமை பறிபோகிறது'

களனி, புதன்

தொழிலாளி வகுப்பினர்க்கு முகத்திரையிட்டு அவர்களது பேச்சுச்சுதந்திரத்தை அபகரிப்பதன் மூலம் இலங்கையில் ஒரு சோஷலிஸ அரசாங்கத்தை நிறுவ ஸ்ரீமதி பண்டாரநாயக்காவும் அவரைச் சேர்ந்தவர்களும் கனவுகாண்கிருர்களா என்று கோட்டே எம். பி. திரு ஸ்டான்லி திலகரத்ன கடவத்தையிலுள்ள இ. போ. ச. நிலையத்தில் நடைபெற்ற இ. போ. ச. தொழிலாளர் யூனியனின் கூட்டமொன்றில் பேசியபோது குறிப்பிட்டார். இ. போ. ச. தொழிலாளர் யூனியன் மூன்றின் ஆதரவில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொழில் அமைச்சர் நத்தை வேகத்தில் செயலாற்றி வருவதாகக் கோட்டே பிரதிநிதி கண்டித்துப் பேசினர்.

## வானொலி நிகழ்ச்சிகள்

**வியாழன் 17-1-63**

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 வாத்தியக கோஷ்டி.

இரவு 7-00 பேச்சு, 7-15 நேயர் விருப்பம், 7-45 'கலையின் விளை'—நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 லயவின்யாசம், 9-30 குரல் வகை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்).

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள் வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-35 கே. ஆர். காந்தாஸ்வாமிநாதன்—பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு 1-00 கே. ஆர். காந்தாஸ்வாமிநாதன்—பாட்டு 1-30 வாத்திய இசை, 1-50 குரலிசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 வாத்திய இசை, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப்பாடல் 7-35 வி. வீராசாமி—பேச்சு. 7-45 ராகம், தானம், பல்லவி டி. ஆர். கிருஷ்ணமாச்சாமி—வீணை, 8-40 விவேகானந்தா நூற்றாண்டு விழா விசேஷ நிகழ்ச்சி, 9-15 வீரபாரதம்—இசைச்சித்திரம், 9-30 அகில பாரத சித்திரம்.

## மாநகரசபை வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாநகரசபைக் கோஷ்டிக்கும் பொலிஸ் கோஷ்டிக்கிடையே நேற்றுமாலை நடைபெற்ற ஓர் சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் மாநகரசபைக் கோஷ்டி வெற்றி பெற்றுள்ளது.

பொலிஸ் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், மாநகரசபைக் கோஷ்டி 11 கோல்கள் போட்டது. பொலிஸ் கோஷ்டி ஒரு கோலும் போடவில்லை.

திரு. சிங்கராயர் மத்தியஸ்தம் வகித்தார்.

## கிரிக்கட் போட்டி

பருத்தித்துறை, செவ்.

பெப்ரவரி மாதம் 18-ம் 19-ம் திகதிகளில் பருத்தித்துறை காட்லிக் கல்லூரிக்கும் கண்டி செண் சில்வெஸ்ரேஸ கல்லூரிக்கும் இடையே சிநேகபூர்வமான கிரிக்கட் போட்டிகள் நடைபெறவிருக்கின்றன.

பெப்ரவரி மாதம் 9-ம் திகதியன்று காட்லிக் கல்லூரி தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியுடன் விளையாடும் எனவும் தெரியவருகிறது.

## முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்கு கிராமவாசிகள் எதிர்ப்பு

### பிரதமருக்கு விண்ணப்பம்

உடுநுவரை, புதன்

நியான்டகொல்ல தோட்டத்தில் முஸ்லிம் மகாவித்தியாலயம் ஒன்றை நிறுவுவதென்ற கல்வி இலாகாவின் யோசனைக்கு எலுகொட, யலேகொட, மீவட்டுற, ஹென்டிநிய, பேராதனை ஆகிய கிராமங்களிலுள்ள மக்களில் 90 சத விகிதத்துக்குமதிகமானோர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

மேற்கண்ட கிராமங்களிலுள்ள மொத்த ஜனத் தொகையில் பத்து சத விகிதமான முஸ்லிம், தமிழர்களின் தேவைகளுக்காக ஒரு முஸ்லிம் பாடசாலையும் தமிழ்ப் பாடசாலையும் இருக்கிறதென்றும், ஆனல் ஏராளமான சிங்களக் குழந்தைகள் பாடசாலைகளில் அனுமதி கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள் என்றும் சம்பந்தப்பட்ட கிராமவாசிகள் தெரிவித்துள்ளனர்.

ஒரு சமூகத்தினருக்கு மட்டும் மகா வித்தியாலயமொன்றை நிறுவாது, எல்லா சமூகத்தைச் சேர்ந்த குழந்தைகளும் கல்வி பெறும் பொருட்டு மகா வித்தியாலயமொன்றை நிறுவுமாறு பிரதம மந்திரியைக் கேட்பதென்றும் பிரதமருக்கு இதுபற்றி ஆட்சேபமனு ஒன்றை அனுப்புவதென்றும் அவர்கள் ஏகமனதாக முடிவு செய்துள்ளனர்.

### வென்னப்புவ

வென்னப்புவ தொகுதியிலுள்ள ஜோசப் வாஸ் கல்லூரி, லுனுவில, கத்தகெண்ட மகா வித்தியாலயம் ஆகிய வற்றில் இடமின்மை காரணத்தால், மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

ஜி. ஸி. ஈ. சித்தியடைந்த பல மாணவர்கள் எச். எஸ். ஸி. வகுப்புகளில் கல்வி பயிலுவதற்கு இங்குள் பாடசாலைகளில் போதிய இடவசதி இல்லாத காரணத்தினல் சிரேஷ்ட, கனிஷ்ட பாடசாலைகளில் சேருவதற்கு மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

### குண்டகசாலை

புதிதாகச் சேரும் மாணவர்களின் தொகை அதிகரித்திருப்பதால் இங்குள்ள பாடசாலைகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. இங்குள்ள பாடசாலைகளிலிருந்து வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்குப்பதிலாக எவரும் நியமிக்கப்படவில்லை. சிலபாடசாலைகளில், ஆசிரியர்கள் பல வகுப்புகளையும் மேற்பார்வை செய்ய வேண்டியிருக்கிறது.

### மட்டக்களப்பு

மட்டக்களப்பு, அட்டாளைச்சேனையிலுள்ள அரசினர் முஸ்லிம் பயிற்சிக் கலாசாலையில் கல்வி பயிலுவதற்கு வருடா வருடம் 150 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். ஆனல் இந்த வருடத்தில் 82 மாணவர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக இப்பகுதியிலுள்ள முஸ்லிம்களிடையே அதிருப்தி ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## இரண்டுலட்சம் கூப்பன்புத்தகங்கள்

### அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டன

கொழும்பு, புதன்

200,000-க்கு அதிகமானோர் தங்களது கூப்பன் புத்தகங்களை அரசினரிடம் ஒப்படைத்துள்ளனர். கூப்பன் புத்தகங்களைத் திருப்பி ஒப்படைத்த இவர்களுக்கு நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாக வர்த்தக, உணவு, கப்பல் மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன தெரிவிக்கையில், தாம் விடுத்த வேண்டுகோளுக்கு நாட்டு மக்கள் செவிசாய்த்துள்ளார்களென்றும் அரசாங்கத்துக்கு உதவியளிக்க இவர்கள் முன்வந்திருக்கிறார்களென்றும் கூறினர்.

தொழிலாளர்கள் மட்டுமின்றி குமாஸ்தாக்களும், மற்றும் பல உத்தியோகஸ்தர்களும் தங்களது கூப்பன் புத்தகங்களைத் திருப்பி ஒப்படைத்துள்ளனர் எனறும் வார முடிவில் மட்டும், தாம் கையெழுத்திட்ட 500 நற்சாட்சிப்பத்திரங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதென்றும் அவர் கூறினர்.

## மார்கழிமாத பஜனை

[illegible], செவ்வாய்

தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தினர் தொல்புரம் அகிழூக்குமாரிஅம்மன் கோவிலில் திருவெம்பாவைப் பூஜை மார்கழிமாத அதிகாலைப்பஜனை என்பனவற்றைச் சிறப்பாகக் கொண்டாடினர். இந்நிலையத்தினர் தொல்புரம் அ. மி. பாடசாலையில் திருவெம்பாவை விழாவை சுளிபுரம் கிராமசபை முன்னல் தலைவர் திரு. [illegible] கி. நவரத்தினம் தலைமையில் கொண்டாடினர்.


விலையில் மலிவானது... பாவிக்கச் சிக்கனமானது...




உங்கள் குடும்பத்தில் அனைவருக்கும் ஏற்ற பானம்!

வரவுக்குள் செலவைக் கட்டுப்படுத்த வேண்டுமா? அப்படியென்றல் நீங்கள் ஸல்லுக்கு ஆசி கூறுவீர்கள். அது சாதாரண மோல்டட் பால் விதங்களை விட விலையில் அதிகமில்லை. அது பாலுக்கும் சீனிக்கும் செலவாகும் பணத்தை மிச்சமாக்குகிறது! உங்கள் குடும்பத்தார் ஸல்லைப் பருகி பெறும் இன்ப அனுபவத்திற்காக உங்களை வாழ்த்துவார்கள்! வேறெந்த மோல்டட் பாலுக்கும் இதைப்போன்ற சுவையில்லை—பாலாடையின் சுவை மிகுந்த பரவச மூட்டும் தித்திப்பு! நீருடன் கலந்து பால்போலப் பருகலாம் அல்லது டீ, கோப்பியுடன், பாலுக்குப் பதிலாகச் சேர்த்துக்கொண்டும் பருகலாம். ஸல் உடன் கரைந்து விடுகிறது!

குடும்பத்தார் உடன் விரும்புவது

ஸல் உடன் கரையும் மோல்ட் பால்—ஹார்லிக்ஸ் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்பட்டது

# 'சிறுகதை இலக்கியம் பெருமைப்படுமளவு வளர்ந்துள்ளது"

கொழும்பு, புதன்

"இன்று நமது நாட்டில் சிறுகதை இலக்கியம் நாம் பெருமைப்பட்டுக்கொள்ளக் கூடிய அளவுக்கு நமது நாட்டு உணர்ச்சிகளை உயிர்த்துடிப்புகளை வெளிக்காட்டி வளர்ந்திருக்கிறது. சிறுகதைத்துறையின் இத்தகைய வளர்ச்சியே "ஈழத்து இலயக்கியம்" என்ற பதத்தை நம்மிடையே அடிக்கடி வழங்கிவரச் செய்கின்றது."

இவ்வாறு சென்ற சனியன்று கொழும்பு விவேகானந்த வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இலக்கிய நண்பர்கள் சந்திப்புக் கூட்டத்தில் பேசிய திரு. கா. சிவத்தம்பி குறிப்பிட்டார். யாழ். இளம் எழுத்தாளர் சங்கமும், குழந்தை இலக்கிய எழுத்தாளர் சங்கமும் ஒன்றுசேர்ந்து ஏற்படுத்திய இந்தக் கூட்டத்திற்கு திரு. சில்லையூர் செல்வராசன் தலைமைவகித்தார்.

"காலத்துக்குத் தக்கமாதிரி இலக்கியம் மாறிக்கொண்டு வருகின்றது. அன்று கவிதைக்கிருந்த மதிப்பு இன்று அதற்கில்லை. காலப்போக்கில் சிறுகதை அந்த இடத்தைப் பெற்றுக்கொண்டது. இன்றைய நமது சமுதாய அமைப்புக்கிணங்க சிறுகதை முக்கிய இடம்பெற்று மிளிருகின்றது" என்று கூறிய திரு. சிவத்தம்பி இலககியத்தின் மற்றத் துறைகளைப்பற்றியும் குறிப்பிட்டார். சிறுகதைத் துறையில் நாம் வளர்ந்திருக்கின்றமாதிரி கவிதையில் வளரவில்லை. அதற்குக் காரணம் மக்களியக்கமான ரீதியிலமைந்த ஓர் முறை இங்கு தோன்றவில்லை. கடந்த சத்தியாக்கிரகத்தின்போது இது ஓரளவு ஏற்பட்டாலும் முற்றிலும் ஏற்படவில்லை" வரலாறுபற்றி குறிப்பிடும்போது "கல்லூரிகளில் கற்கும் மாணவர்கட்கு இது யாழ்ப்பாண வரலாறு, அது மட்டக்களப்புச் சரித்திரம் என்று அளிக்கக்கூடிய தகுதி வாய்ந்த நூல்கள் ஒன்றேனும் இல்லாதது பெரிதும் வெட்கப்படக்கூடியது" என்றார்.

திரு. சில்லையூர் செல்வராசன் தமது தலைமையுரையில் "சிங்கள எழுத்தாளர் மத்தியில் தோன்றிய ஒரு புதுநிலை தமிழ் இலக்கியப் பரப்பையும் ஓரளவு பாதித்திருக்கின்றது" என்றார்.

பல வளரும் எழுத்தாளர்களும் இலக்கிய ரசிகர்களும் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் திருவாளர்கள் கு. இராமச்சந்திரன், கனகரத்தினம், கலாபரமேஸ்வரன் முதலியோரும் கருத்துரைகள் வழங்கினர்.

—

## விபத்தில் 45 பேர்பலி

கட்டாக், ஜன. 16

கட்டாக்கிலிருந்து ஏழு மைல் தூரத்தில் பாலமொன்றில் ஏற்பட்டவிபத்தில் 45 பேர் கொல்லப்பட்டனர். இதில் 30 பேர் ஸ்தலத்திலேயே மாண்டனர். மற்றும் சில காயமடைந்தனர்.


## இப்பொழுது நடைபெறுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (கீர்கொழும்பு)

விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) மொடேர்ன் (பதுளை)

ஸ்ரீகிருஷ்ணு (திருகோணமலை) ஜுபிட்டர் (குருணாகலை) லக்ஷ்மி (இரத்தினபுரி)

தீவொளி (நுவரேலியா) விஜிதா (ஹட்டன்) ஜெமினி (ரு+லை)

காதுக்கினிய பாடல்களும், திடுக்கிடும் சண்டைக் காட்சிகளும் நிறைந்த படம்



எம். ஜி. ராமச்சந்திரன், பத்மினி, ராகினி
எம். என். நம்பியார், எம். என். ராஜம்
ஏ. ஜி. சக்கரபாணி, கே. ஏ. தங்கவேலு
எஸ். எஸ். சரோஜா, மோகனு
மற்றும் பலர் நடித்த

# ராணி சம்யுக்தா

பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்
டைரக்ஷன் டி. யோகானந்த்

## மனோகரா
(யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசன், பத்மினி, தங்கவேலு
மற்றும் பலர் நடித்த
உத்தம புத்திரன்


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 17-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

## சதி வழக்கு: புதிய நீதிமன்றமும் . . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதன் பின்னர், சதிசந்தேக நபர்கள் 24பேரையும்பிஸகால் காவலில் வைப்பதற்கு நீதியரசர் உத்தரவிட்டார். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்து இன்று விசாரணைக்குக் கொண்டுவரப்பட்ட ஐந்தாவது எதிரியான திரு. சிட்னி டி' சொய்சா மீண்டும் ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டார். அங்கு அவர் பிஸ்கால் காவலில் இருப்பார். வழக்கு விசாரணைத் திகதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டபொழுது நீதிமன்றத்தில் சமுகமாயிருந்த சம்பந்தப்பட்ட சகலருக்கும் நீதியரசர் சில்வா வருத்தம் தெரிவித்துக்கொண்டார். நீதியரசர் அபயசுந்தரா அங்கம்வகிக்காத மற்றொரு நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணை செய்யப்படவேண்டுமெனத் தாங்கள் கருதுவதாகவும் அவர் தெரிவித்தார்.

### பாதுகாப்புடன் வந்தனர்

சட்டபூர்வமான இலங்கை அரசாங்கத்தை சட்டரீதியற்ற முறையில் கவிழ்க்க 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ந் திகதி சதிசெய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டபொலிஸ்,ராணுவ கடற்படை, விமானப்படை ஆகியவைகளில் சேவைசெய்த 24 பேர்களும் இன்று கடற்படைத் தலைமைக்காரியாலயத்திலுள்ள சுப்ரீம் கோர்ட்டுக்கு பலத்த பாதுகாப்புடன் கொண்டுவரப்பட்டனர். நீதிமன்றத்தினுள்ளேயும்வெளியேயும்பலத்தபொலிஸ்பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

## திருவுளச் சீட்டுமூலம் திடவீரசிங்கம தெரிவு

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன்துறை பட்டின சபையின் புதிய தலைவராக திரு. மு. திடவீரசிங்கம் இன்று தெரிவு செய்யப்பட்டார்.

பட்டினசபை மண்டபத்தில் உதவி ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனர் திரு. எஸ். வி. மாணிக்கவாசகர் தலைமையில் இன்று மாலை தலைவர்தெரிவு நடைபெற்றது.

தலைவர் பதவிக்கு திரு. மு. திடவீரசிங்கத்தின் பெயரும் சு. வைத்திலிங்கத்தின் பெயரும் பிரேரிக்கப்பட்டன. வாக்கெடுப்பின் போது இருவருக்கும் சமமானவாக்குகள் கிடைத்தன இதன் பின்னர் திருவுளச்சீட்டு எடுக்கப்பட்டது. அதில் திரு. திடவீரசிங்கம் தெரிவு செய்யப்பட்டார்.

திரு. திடவீரசிங்கம் காங்கேசன்துறை பட்டினசபையில் பத்துவருட காலம் அங்கத்தவராகப் பணியாற்றியிருப்பதுடன் உபதலைவராகவும் பணியாற்றியிருக்கிறார்.

திரு எஸ். கிருபாமூர்த்தி பட்டினசபையின் உபதலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பெற்றார்.

—

# 'சீன - இந்திய எல்லைத் தகராறுதேவையற்றது'

## கிழக்கு பேர்லின் கம்யூ. தலைவர் கருத்து

பேர்லின், ஜன. 17

'இந்திய–சீன எல்லைத்தகராறுதேவையற்றது. அநாவசியமானது' என்று கிழக்கு ஜேர்மன் கம்யூனிஸ்ட்கட்சி மகாநாட்டில அதன் தலைவர் திரு வூல்பிரைட் பேசுகையில் கூறினார்.

சோவியத் பிரதமர் குருஷ்சேவும் கலந்துகொள்ளும் இந்த மகாநாட்டில் திரு. வூல்பிரைட் பேசுகையில் இந்திய–சீன எல்லைத் தகராறு சமாதானமாகத் தீர்க்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். எல்லைத்தகராறு சம்பந்தமாக கம்யூனிஸ்ட் நாடுகளுடன் சீன கலந்தாலோசனை செய்யவுமில்லை, தகவல் தெரிவிக்கவுமில்லை என்று அவர் சொன்னார். இந்தியாவுடன் எங்களுக்கு நல்லுறவுண்டு. அதை மேலும் தொடர்ந்து வளர்த்து வருவோம் என்று திரு. வூல்பிரைட் அறிவித்தார்.

அல்பேனிய கம்யூனிஸ்ட் கட்சியை அவர் கண்டித்துப் பேசினர். திரு. குருஷ்சேவின் சமாதான சகவாழ்வுக் கொள்கையை அவர் பாராட்டினர்.

—

## வாஷிங்டனில் இத்தாலியப் பிரதமர்

வாஷிங்டன், ஜன. 16

இத்தாலியப் பிரதமர் திரு. பான்பானி வாஷிங்டனுக்கு விஜயம் செய்துள்ளார். அமெரிக்க ஜனாதிபதி கென்னடியையும் வெளிவ்விவகார மந்திரி திரு. டீன்றஸ்கையும் இவர் சந்தித்துப் பேசுவார்.

—

## கன்னியாஸ்திரி தாதிமார்கள் நீக்கவேண்டாம் என கோரிக்கை

ஊர்காவற்றுறை, செவ்வாய்

தீவுப்பகுதிக்குப் பொதுவான பெரிய ஆஸ்பத்திரியாக விளங்கும் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் கன்னியாஸ்திரிதாதிமார்களை விலக்க வேண்டாமென ஊர்காவற்றுறை சனசமூகநிலையக் காரியதரிசி திரு. மரியதாஸ் சுகாதார அமைச்சைக் கேட்டிருக்கிறார்.

இவர்களை நீக்கவேண்டாம் என தீவுப்பகுதி பொதுநல ஸ்தாபனங்கள் ஒன்றுசேர்ந்து அரசாங்கத்தைக்கேட்பதுபற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

## ஸ்தலஸ்தாபன ஊழியர்சங்கம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம மாநகரசபை நகரசுத்திக் தொழிலாளர்கள் சமீபத்தில் நடத்திய வேலைநிறுத்தம் சட்டவிரோதமானதென்றும், வேலைநிறுத்த நாட்களுக்கான சம்பளம வழங்கப்படமாட்டாதெனவும் யாழ்ப்பாணம் மாநகரசபை தீர்மானித்துள்ளதனை கண்டித்து அகிலஇலங்கை ஸ்தலஸ்தாபன ஊழியர் சங்கத்தின் வடபிரதேசக கிளை தீர்மானமொன்று நிறைவேற்றியுள்ளது. நேற்றுக் காலை தொழிலாளர் சங்கக் கூட்டம் திரு. அ. சூஸ் தலைமையில் நிகழ்ந்தபோது பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தொழிலாளர் குடும்பங்களிற் சிலவற்றுக்கு வீடு இல்லாத பிரச்சனையைத் தீர்க்கும் வகையில் உடனடியாகத் தற்காலிக வீடுகள் அமைக்கப்படவேண்டுமென்னும் தீர்மானமும், வடபிரதேசத்தில் உள்ள கிராம,பட்டின, நகரசபை ஊழியர்களுக்கிடையேயான கூட்டமொன்றினை இம்மாதம் 27-ந்திகதி நடத்துவதென்ற தீர்மானமும் உட்பட வேறு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

இச் சங்கத்தின் தீர்மானங்களைக் கொண்ட பிரதிகள் அகில இலங்கை தொழிலாளர் சம்மேளனம், திரு. பீட்டர் கெனமன், உள்நாட்டு மந்திரி, அரசாங்க அதிபர், மேயர், கமிஷனர், செனட்டர் திரு. ஆனந்த திசநாயகா ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

—

## பாராட்டு விழா

புங்குடுதீவு, புதன்

புங்குடுதீவு அரசினர் கனிஷ்ட வைத்தியர் திரு. இ. சின்னராசா, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதையொட்டி, அன்னாரின் சேவையைப் பாராட்டும் முகமாக இம்மாதம் 20-ம் திகதி புங்குடுதீவுப் பொது மக்கள் பாராட்டு விழாவொன்றை நடத்த ஒழுங்கு செய்துள்ளனர்.

## ரஷ்யதபாற் சேவை தூதுகோஷ்டியினர் இங்கு வருகின்றனர்

யாழ்ப்பாணம், வியாழன்

ரஷ்ய தபால் தந்தி போக்குவரத்து இலாகா யூனியனைச் சேர்ந்த தூதுகோஸ்டியினர் இங்கு வருவதை முன்னிட்டு ஈழத்தபால் அதிபர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை அவர்களுக்கு ஒரு வரவேற்புபசாரம் அளிக்க ஒழுங்குகள் செய்துள்ளது.

23-ம் திகதி யாழ்ப்பாணம் விஜயம்செய்யும் தூதுகோஷ்டியினரை வரவேற்கு முகமாக இங்குள்ள சகல தொழிற் சங்கங்களும் யாழ்ப்பாண நகர மண்டபத்தில் ஒரு பொதுக் கூட்டத்தையும் நடத்தவிருக்கின்றன.

—

## அங்கத்தவர் ராஜினமா

வட்டுக்கோட்டை, புதன்

வட்டுக்கோட்டை கிராமச் சங்கத்தின் முதலாம் வட்டார அங்கத்தவர் திரு. சி. கணபதிப்பிள்ளை தமது பதவியிலிருந்தும் ராஜினமாச் செய்துவிட்டதாக அறிவித்துள்ளார்.

சங்கத்தால் கவனிக்கப்படவேண்டிய எல்லைத் தகராறு மதிற்தகராறு உட்பட பலதகராறுகளை முன்னிட்டும் சங்கத்தின் நிர்வாக ஊழல்களை முன்னிட்டும் தாம் ராஜினமாச் செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.


சரித்திரம் வெளிவந்துவிட்டது!

ஆதிகாலம் — மத்தியகால

## இலங்கைச் சரித்திரம்

எச். எஸ். சி. (H. S. C.) பல்கலைக்கழக புகுமுக வகுப்புகளுக்குரியது.

ஆக்கியோன்: திரு. வ. மகாலிங்கம் B. A; (Ceylon)

விலை 2-50

பதிப்பாளர்:
ஸ்ரீகாந்தா அச்சகம் — புத்தகசாலை
213, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.